# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 10 வியாழக்கிழமை (27.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 335





13 இந்தியப் பெருங்கடலில் சீனா ஊடுருவல்





15 ஜேப்ஸின் வாழ்க்கை புத்தகம்





17 தடுமாறும் துடுப்பாட்டம்


# கூட்டமைப்பு-அமெரிக்கா பேச்சு வாஷிங்டனில் நேற்று ஆரம்பம்

## இராஜாங்கத் திணைக்களத்தில் முக்கிய சந்திப்பு

வாஷிங்டன், ஒக்ரோபர் 27

அமெரிக்கா சென்றடைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுக்கும் அமெரிக்கத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு அமெரிக்க நேரப்படி நேற்றுப் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ( இலங்கை நேரப்படி நேற்று இரவு 10 மணிக்கு) வாஷிங்டனில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது.

அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் அதிகாலை 6 மணிக்கு இலங்கையில் இருந்து புறப்பட்ட கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழு நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு வாஷிங்டனைச் சென்றடைந்தது. இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.


வாஷிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அமெரிக்க நேரப்படி நேற்றுக் காலை 9.20 மணிக்கு (இலங்கை நேரப்படி நேற்று இரவு 9.50 மணிக்கு) தமிழ்க் கூட்டமைப்பின் குழுவினர் சென்றனர். அவர்களை அங்கு இராஜாங்கத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் வரவேற்றதாகத் தெரியவருகிறது.

அமெரிக்க உயர்அதிகாரிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு நேற்று அமெரிக்க நேரப்படி சரியாகக் காலை 9.30 மணிக்கு இராஜாங்கத் திணைக்களத்தில் ஆரம்பமாகியதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்காவில் பலதரப்பட்டவர்களையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நேற்று இடம்பெற்ற முதலாவது சந்திப்பு யாருடன் நடைபெற்றது என்பது குறித்து இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்த முடிய

பக் 18

## வடக்கில் ஆரவாரமின்றி கழிந்த தீபாவளித் திருநாள்



யாழ்ப்பாணம், ஒக்.27

வடக்கில் இந்த முறை தீபாவளிப் பண்டிகையை மக்கள் ஆரவாரமின்றி கொண்டாடினர். அநேகமானவர்கள் ஆலய வழிபாடுகளுடன் மிக அமைதியாக தீபாவளி நாளைக் கழித்தனர்.

நாட்டில் சமாதானம் நிலவுவ

பக் 19

## ஆஸ்திரேலியத் தடுப்பு முகாமில் இலங்கைத் தமிழர் தற்கொலை

சிட்னி, ஒக்.27

தீபாவளியன்று சமயச் சடங்கில் பங்கேற்க ஆஸ்திரேலிய அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்பட்டமையைத் தொடர்ந்து ஈழத் தமிழ் இளைஞர் ஒருவர் சிட்னி தடுப்புமுகாமில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சிட்னி குடிவரவு வதிவிட வீடமைப்புத் தொகுதியில், நஞ்சருந்திய நிலையில் மீட்கப்பட்ட இவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்தார் என ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இவர் மரணமாகியுள்ளார்.

இவரது மரணம் இடம்பெற்ற சூழல் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று ஆஸ்திரேலிய பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வில்லாவூட் தடுப்பு முகாமில் கடந்த ஆண்டு

பக் 19

## உள்ளூராட்சித் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவர அரசு முஸ்தீபு

### தொகுதி எல்லை மீள்நிர்ணயம் செய்ய ஆணைக்குழு அமைக்கவும் ஏற்பாடு

கொழும்பு, ஒக்.27

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான சட்டத்திருத்த ஆலோசனைகளை அடுத்தவருடம் ஜனவரி மாதமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது எனத் தெரியவருகிறது.

இதனையடுத்து, தேர்தல் தொகுதிகளில் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்கான ஆணைக்குழுவொன்றையும் அரசு அமைக்கவுள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையிலான மூன்றுபேர் கொண்ட உயர்மட்டக் குழு இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது என அறியமுடிகிறது.

பிரதேசத்தின் எல்லைகளின் அளவு, அபிவிருத்தி உட்பட மூன்று முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்த உயர்மட்டக் குழு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது

பக் 19

## கைதிகளைத் தடுத்து வைப்பதற்கு சிட்னி முகாம் உகந்த இடமல்ல!

### ஆஸி.குடிவரவு அமைச்சர் அதிருப்தி

சிட்னி, ஒக்.27

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி விலாவூட் தடுப்புமுகாம், கைதிகளைத் தடுத்துவைப்பதற்கு ஓர் உகந்த இடமல்ல என்று குடிவரவு அமைச்சர் கிறிஸ்போ வென் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பு முகாமில் இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார். அவர் 2010 ஆம் வருட மார்ச் பிற்பகுதியிலிருந்து இதில் தடுத்து

பக் 19

## போர்க் குற்ற விசாரணை அவசியம் ஆஸி.முன்னாள் பிரதமர் வலியுறுத்து

சிட்னி, ஒக்.27

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையே இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுவது குறித்து இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மெல்கம் ப்ரெஷெர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாட்டுத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

பக் 19

## ஏழு நாள்களுக்குள் சாரதி அனுமதிப் பத்திரம்

கொழும்பு, ஒக்.27

இலங்கையர்கள் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு 6 மாதங்கள் முதல் ஒரு வருட காலம்வரை காத்திருக்கத் தேவையில்லை எனவும் விரைவில் இலத்திரனியல் சாரதி அனுமதிப்பத்திரங்களை 7 நாள்களுக்குள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் போக்குவரத்து அமைச்சு நேற்று அறிவித்தது.

வேரஹெரவிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக தினமும் 1,200 விண்ணப்பங்கள் கிடைப்பதாகவும் அவற்றில் 600 விண்ணப்பங்களே தினமும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்க கூறினார்.

இனிமேல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான செயன்முறைகள் இரு நாள்களில் பூர்த்தியாக்கப்படும் எனவும் விண்ணப்பதாரிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரங்கள் 7 தினங்களுக்குள் தபாலில் கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

பக் 19

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

### ஆஸி. பிரதமரிடம் ஜனாதிபதி மஹிந்த உறுதி

சிட்னி, ஒக்.27

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட்டிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட்டிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 22ஆவது பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்று பஸிபிக் ஹோட்டலில் வைத்து ஆஸ்திரேலியப் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.


இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும்

பக் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைப்பெய்யும் சாத்தியம்.

# வடக்கு, கிழக்கு மக்கள் நலன் கருதியே காணிப்பதிவு நடைமுறை முன்னெடுப்பு

## கூட்டமைப்பினர் எதிர்ப்பது அநீதியானது என்கிறார் பஸில்

கொழும்பு, ஒக். 27

வடக்கு, கிழக்கில் காணிப் பதிவு நடைமுறையைக் கூட்டமைப்பினர் எதிர்ப்பது அநீதியானதாகும். வடக்கு, கிழக்கு மக்களின் நலன் கருதியே இந்த வேலைத் திட்டத்தை நாங்கள் முன்னெடுக்கின்றோம்.

இவ்வாறு கூறுகிறார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:



கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணி உரிமையாளர்களிடம் அவற்றுக்கான எந்தவொரு ஆவணமும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அதிகமானோர் அவற்றை இழந்து விட்டனர். மேலும் பல குடும்பங்கள் அரச காணிகளில் குடியிருந்துள்ளனர்.

ஏராளமான அரச காணிகள் வடக்கு, கிழக்கில் அரசுக்கு சொந்தமான நிறைய காணிகள் உள்ளன. எனவே இவற்றை அடையாளம் காணவேண்டியுள்ளது. அரச காணிகளில் குடியிருந்தவர்களுக்கும் அவற்றை முறையாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் காணி தொடர்பான எந்தவொரு ஆவணமும் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே நாங்கள் இந்தக் காணிப்பதிவுத் திட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

காணி ஆவணம் எதுவும் இல்லாதவர்கள் எவ்வாறு இந்திய வீட்டுத்திட்டத்தைப் பெற முடியும் எனவும் பஸில் ராஜபக்ஷ இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ-எ)

# மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணுக்கு நேர்ந்த கதி

யாழ்ப்பாணம், ஒக்.27

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்மணி, நாயும் பூனையும் குறுக்கே ஓடியதனால் அவற்றுடன் மோதுண்டு விழுந்ததில் அவரது காலின் பாதம் விலகிய நிலையில் சிகிச்சைக்கென யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அளவெட்டி, விளானில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இளவாலையைச் சேர்ந்த பி.பகீரதி (வயது-32) என்பவரே பாதிக்கப்பட்டார். உடனடியாக சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-4)

# வெடி கொளுத்திய சிறுவர்கள் மீது காற்றடிக்கும் 'பம்'மினால் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.27

தீபாவளித்தினமான நேற்றுப் பலர் தமது வீடுகளில் பட்டாசு கொளுத்தி தீபாவளியைக் கொண்டாடினர். மாதகலில் வீடொன்றில் இவ்வாறு பட்டாசு கொளுத்தி கொண்டாடிக் கொண்டிருந்த போது பட்டாசு ஒன்று பக்கத்து வீட்டு வளவினுள் சென்று வெடித்தது.

இதனால் கோபமடைந்த பக்கத்து வீட்டுக்காரர் பட்டாசு கொளுத்திய இரண்டு பேரையும் பிடித்து காற்றடிக்கும் 'பம்' மூலம் தாக்கியுள்ளார். இதனால் காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் பிரதான வீதி, மாதகலில் நேற்றுக் காலை'7.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த அ.ராகுலன்(வயது-18), அ.நவநீதன்(வயது-9) ஆகியோரே தலையிலும், உடம்பிலும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (த-4)

# ஊஞ்சலில் விளையாடிய வேளையில் சாறி கழுத்தில் சுற்றி சிறுவன் சாவு

## புங்குடுதீவில் நேற்று பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

சாறியினால் ஊஞ்சல் கட்டி அதிலிருந்து சுழன்று ஆடிக் கொண்டிருந்த சிறுவன், சாறியினால் கழுத்துப் பகுதி சுற்றப்பட்டு இறுகி மூச்சுத்திணறலுக்கு உள்ளாகி பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் புங்குடுதீவு 3 ஆம்வட்டாரத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் நிர்மலன்(வயது-11) என்ற சிறுவனே உயிரிழந்தான் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனைக் காப்பாற்றும் நோக்கில் உடனடியாகவே அயலவர்களால் ஓட்டோ மூலம் புங்குடுதீவு வைத்தியசாலைக்கு அவன் கொண்டுசெல்லப்பட்டான். அங்கு வைத்தியர் இல்லை. அதைத் தொடர்ந்து வேலணை வைத்தியசாலைக்கு சிறுவன் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பரிசோதனை செய்த போது ஏற்கனவே உயிரிழந்து விட்டான் என்பது தெரியவந்தது.

பின்னர் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா மரண விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற இந்தச் சிறுவனுக்கு நான்கு சகோதரிகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

# தேசிய கல்வி நிறுவன மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக்.27

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விப் பட்டப்பின் படிப்பு இரண்டாம் நிலைத்தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரிய மாணவர்கள் இலங்கை வங்கியில் செலுத்தப்பட்ட 1250 ரூபாவுக்கான பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் தேசிய கல்வி நிறுவகத்துக்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன் கேட்டுள்ளார். (ஒ-319)



ஆஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்தநாட்டு பிரதமர் ஜுலியா கில்லார்ட்டை பேர்த் நகரில் நேற்று சந்தித்து கலந்துரையாடிய போது.

# கிளிநொச்சி கனகபுரம் வீதியில் கூட்டுறவு விற்பனை நிலையம்

## இன்று நாமல் ராஜபக்ஷ திறந்துவைப்பு

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தின் கூட்டுறவு சிறப்பு விற்பனை நிலையம் ஒன்று கனகபுரம் வீதி, கிளிநொச்சியில் இன்று மாலை 4 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வின் போது கரைச்சிப் பிரிவில் 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 96 மாணவர்கள் கௌரவிக்கப்படுவதுடன், விவசாயிகளுக்கு கிராமிய வங்கியூடாக கடன் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார். (ஒ-10)

# நிகழ்வுகள்

**யாழ். நகரில் கலாசார விழா**

யாழ்.பிரதேச செயலகத்தின் கலாசார பேரவை நடத்தும் கலாசார விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார். (ஒ-313)

**அதிபர்களுக்கான கூட்டம்**

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று முற்பகல் ஒரு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

***

நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**மாணவர்களுக்கான விழிப்புணர்வு**

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் வலய பாடசாலைகளில் கல்வி பயிலும் ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்கள் மற்றும் இடைவிலகிய மாணவர்களின் வரவை அதிகரிக்கும் நோக்குடன் விழிப்புணர்வு நிகழ்வு இன்று மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**மூலிகை தொடர்பான கருத்தரங்கு**

வலி.தென்மேற்கு பிரதேச ஆயுள் வேத பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் மூலிகை தொடர்பான கருத்தரங்கு இன்று முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**ஆன்மிக சொற்பொழிவு**

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு ''வாக்குக்கு அருண [illegible] பொழிவு இன்று [illegible] 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-313)

**ஆங்கில தின விழா**

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் ஆங்கில தினவிழாஇன்றுகாலை9மணிக்குநடைபெறவுள்ளது.(ஒ-313)

**வினாடி வினா போட்டி**

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் மிதிவெடி அபாயக் கல்வித்தினப் போட்டிகளில் கட்டுரை, சித்திரம், வினாடி வினாப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-313)

**சைவநெறி, தமிழ் மொழித் தேர்வுகள்**

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவநெறி மற்றும் தமிழ்மொழித் தேர்வுகள் இன்றும் நாளையும் நடைபெறும். (ஒ-313)

**தெய்வீக இசையரங்கு**

கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் நடத்தும் தெய்வீக இசையரங்கு நடைபெறும். நிகழ்வில்செல்வி ஜெகனி சண்முகநாதன் இசைக் கச்சேரி வழங்குவார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக இராணுவத்தினரின் தீபாவளி நிகழ்வு





யாழ்ப்பாணம்,ஒக்.27

தீபாவளித் தினமான நேற்று இராணுவத்தினர் யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில் தீபங்கள் ஏற்றியும், மின் விளக்குகளால் அலங்கரித்தும் தீபாவளியைக் கொண்டாடினார்கள்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா, யாழ்.மாநகர முதல்வர் 522ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி உட்பட இராணுவ உயர் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அலங்கரிக்கப்பட்ட வாழைக் குற்றிகளில் சுட்டிகள் வைத்து எண்ணெய் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. இதற்கு முன்பதாக யாழ்.ஆஸ்பத்திரி விதியில் யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு முன்பதாக விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

ஆஸ்பத்திரி வீதியின் நடுவே உள்ள மரங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றை திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோர் இணைந்து ஆழியை இயக்கி ஒளிரவைத்தனர். மழைத்தூறலின் மத்தியிலும் இந்த நிகழ்வு நடைபெற்றது. (த-4)

# செய்தித்துளிகள்; ஒரே பார்வையில்

## நீதிவானின் கார் விபத்து

குருநாகல் - சிலாபம் வீதியில் ரம்பேறு கம்மெலிய என்ற இடத்தில் மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி திருமதி.கே. சிவபாக்கியசுந்தரம் சென்ற கார் விபத்துக்குள்ளானது. காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## போலி நாணயத்தாள்களுடன் கைது

ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை வைத்திருந்த இரண்டு இளைஞர்களை பொத்துஹர பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொல்காவலை மற்றும் மரதன்கடவலப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர்களிடமிருந்து சுமார் 45 போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## பொன்சேகாவுக்கு சிகிச்சை

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தனியார் வைத்தியசாலை ஒன்றில் சி.ரி. ஸ்கேன் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என அவரின் மனைவி திருமதி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

## பங்குச்சந்தை வீழ்ச்சி

கொழும்பு பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அண்மையில் வர்த்தக நடவடிக்கையில் இணைந்து கொண்ட சில வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்வதனால் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டவர் சடலம் மீட்பு

காலி கடற்பரப்பில் காணாமல் போன வெளிநாட்டவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என கடற்படையினர் அறிவித்துள்ளனர். சுவீடன் நாட்டைச் சேர்ந்த பிரஜையே இவ்வாறு காணாமல் போய் உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி காணாமல் போன குறித்த நபரின் சடலம் நேற்றுமுன்தினம் உனவட்டுனவை அண்மித்த கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியல் நவம்பரில்

2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல், எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியில் காட்சிப் படுத்தப்படவுள்ளது. பல்வேறு அரச காரியாலயங்களில் பெயர்ப் பட்டியல் காட்சிப் படுத்தப்படவுள்ளதாக எனத் தேர்தல்கள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட மற்றும் பிரதேச காரியாலயங்களிலும், தபாலக மற்றும் துணைத் தபாலகக் காரியாலயங்களிலும் இந்தப் பட்டியல் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. இந்தப் பட்டியலில் தமது பெயர் இல்லாத வாக்காளர்கள் அதற்குரிய விண்ணப்பத்தைப் பெற்று, சமர்ப்பிக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.கவின் முக்கிய தீர்மானங்கள்

ஐக்கிய தேசிய கட்சியின் ஒழுக்கச் செயற்பாடுகளைப் பேணும்பொருட்டு எதிர்வரும் மாதங்களில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையில் கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கி சிறுவன் பலி

மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி அநுராதபுரம் 18ஆம் கட்டைப் பகுதியில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். நேற்றுமுன்தினம் மாலை குறித்த சிறுவன் தனது வீட்டுத் தோட்டத்தில் இருந்த வேளையில் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் பாகிஸ்தான் இராணுவ உயரதிகாரிகள்

கொழும்பு, ஒக்.27

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த பத்து அதிகாரிகள் முல்லைத்தீவுக்கு செல்லவுள்ளதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுரகம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த இந்த அதிகாரிகள் பத்துப் பேரும் கண்ணிவெடிகளை அகற்றும் நிபுணர்கள் பாகிஸ்தான் தூதரகம் கூறியுள்ளது.

இருநட்புநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே இந்தப் பயணம் அமைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேணல் சபீர் நிசார் தலைமையில் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் பத்துப் பேரும் கடந்த 13ஆம் திகதி இலங்கை வந்திருந்தனர்.

எதிர்வரும் 28ஆம் திகதி வரை இவர்கள் இங்கு தங்கியிருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் சூடான் மற்றும் கம்போடியாவில் கண்ணிவெடிகளை அகற்றும் மனிதாபிமானப் புணியில் ஈடுபட்டவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் குழு இலங்கை வந்து இரண்டு வாரங்களாகியுள்ளன.

ஆனாலும் இவர்கள் நாடு திரும்புவதற்கு இரண்டு நாள்கள் இருக்கின்ற நிலைலேயே இது பற்றிய செய்திகள் வெளியே கசிய விடப்பட்டுள்ளன.

அத்துடன் கண்ணிவெடிகளை அகற்றும் நிபுணர்களான பாகிஸ்தான் படை அதிகாரிகள் இன்னமும், வன்னியில் கண்ணிவெடிகள் அகற்றப்படும் பகுதிகளை சென்று பார்வையிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(த-10)

# ஹிக்கடுவ விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஒக்.27

ஹிக்கடுவ - வேவல பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதாலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-சி)

# பெண் கழுத்து வெட்டிக் கொலை!

கொழும்பு, ஒக்.27

தம்புள்ளை - குடா மஹயாய - கண்டலம பகுதியில் பெண் ஒருவர் நேற்றுக்காலை கழுத்து வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனத் தம்புள்ளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற தம்புள்ளைப் பொலிஸார் பெண்ணின் சடலத்தை தம்புள்ளை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

28 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

இந்நிலையில் தம்புள்ளை பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-சி)

# ரூபா ஒருகோடி பெறுமதியான ஹெரோயினுடன் மூவர் கைது

## மன்னார் பொலிஸார் அதிரடி

கொழும்பு, ஒக்.27

இந்தியாவிலிருந்து கடத்திவந்ததாகக் கருதப்படும் சுமார் ஒருகோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளைத் தலைமன்னார் பொலிஸார் கைப்பற்றியிருக்கின்றனர். தலைமன்னார் ஊருமலை பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் 1,350 கிராமுடன் பெண் ஒருவரும் இரு ஆண்களும் கைதுசெய்யப்பட்டனர்.

தலைமன்னாரிலிருந்து மன்னாருக்குக் கொண்டுசெல்வதற்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த போதைப் பொருளே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் தலைமன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த-சி)

# அமெரிக்காவின் தீபாவளி வாழ்த்து

கொழும்பு, ஒக்.27

இந்துக்கள் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகைக்கு வாழ்த்துத் தெரிவித்து அமெரிக்க செனட் சபை தீர்மானம் நிறைவேற்றியது.

இருள் அகற்றி ஒளி பெருக்கும் நன்னாளான தீபாவளித் திருநாளை உலகம் முழுவதும் வாழும் இந்துக்கள் குதுகலமாக நேற்றுக் கொண்டாடினர்.

இந்நிலையில், இந்திய அமெரிக்கர்களுக்கு அமெரிக்க செனட் சபை தீபாவளி வாழ்த்துக் கூறியது. இந்த வாழ்த்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை ரோபர்ட் மெம்டெஸ் உள்ளிட்ட 3 செனட்டர்கள் கொண்டுவந்தார்கள்.

இந்த நாளில் அறிவு, அமைதி, செழிப்பு, வளம் ஆகியவற்றால் அனைவரும் நலம் பெற இந்த தீபாவளி விளங்கட்டும் என்று கூறியிருந்தது.

இந்துக்கள், சீனர்கள், ஜைனர்கள் என இந்திய நாட்டு மதத்தவர்களுக்கு பண்டிகை நாளாகத் திகழும் இந்நாளில் எல்லா வளமும் பெற வாழ்த்துகள் என அமெரிக்கா வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் ஆற்றலின் பெருமை கந்தசஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள்

கந்த சஷ்டி விரதம், தீபாவளி அமாவாசை முடிந்து முதல் நாள் தொடங்கி ஆறு நாள்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆறாம் நாள் சூரனுக்கு அருளல்.

கருணை கூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திரு முருகன் வந்து ஆங்கு, உதித்தனன் உலகம் உய்ய!

கந்த சஷ்டி என்பது முருகக் கடவுள் சூரனை அழித்த பெருமையை சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழாவாகும். சஷ்டி என்றால் ஆறு ஆகும். ஐப்பசி மாதம் சுக்கிலபட்ஷ பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாள்களும் கந்த சஷ்டி காலமாகும். இந்த ஆறு நாளையும் சைவர்கள் விரத நாள்களாக அனுஷ்டிக்கின்றனர்.

செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை குலதெய்வமாகவோ, இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர். இந்த ஆறு நாள்களும் சைவர்கள் விரதமிருந்து அதிகாலையில் எழுந்து நீராடி பூரண கும்பம் வைத்து விளக்கேற்றி பூசை வழிபாடு செய்வர்.

தீவிர முருக பக்தர்கள் இந்த விரதத்தை ஒரு கடுந் தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவு உண்பர்.

இந்த உத்தம முறைமையை அனுசரிக்க இயலாதவர்கள் ஐந்து தினங்கள் ஒரு வேளை பால், பழம் மட்டும் அருந்தி, ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது. ஏழாம் நாள் பாரணை அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர்.

தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பை அணிந்து காப்புக் கட்டல் அதாவது சங்கற்பம் செய்தல் வழக்கம்.

பக்தர்கள் ஆறு தினங்களும் முருகன் ஆலயத் தில் இறைவழிபாடு, புராண பாடனம் போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடுவர்.



இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சம[illegible]ப்பிக்க வேண்டும். ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூஜை முடிந்ததும் மகேஸ்வர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்த சஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

முருகப் பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் சூரன் போர் என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம்.

சூர சம்காரத்தின் முடிவில் முருகன் மா மரமாக நின்ற சூரனை தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவு பட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும், சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

கந்தபுராணத்தில் வரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோர் முறையே சைவ சித்தாந்தத்தில் பேசப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபடியில் இருந்து ஆன்மாவுக்கு விடுதலை அளிப்பதோடு ஆணவமலத்தின் பலத்தைக் குறைத்து அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூர சம்காரமாகும்.

ஆறுபடை வீடுகளிலும், அனைத்து முருகன் கோயில்களிலும் இந்த ஆறு நாள்களிலும் சிறப்பான பூஜைகள் நடைபெறும்.

*நிஷாவதி*
*நல்லூர்.*

ஆறு நாள்கள் தொடர்ந்து விரதம் இருப்பவர்களும், இருக்க முடியாமல் போனவர்களும் கூட மாதந்தோறும் வரும் சுக்கில பட்சத்துச் சஷ்டியில் முருகப் பெருமானை வழிபட்டு விரதம் மேற்கொள்ளலாம்.

## வேலினின் விந்தை காட்டு!

கோலமயில் ஏறி நின்று
குன்றுதோர் நடனமாட
பாலன் என்றுன்னை எண்ணி
பரிகசித் தோரையெல்லாம்
வேலது தாங்கி நின்று
வெஞ்சமர் புரிந்து பின்னே
ஓலமிட்டு அலறி ஓடி
ஒழிந்திட்ட சூரன் தன்னை
வேலதால் உடல் கிழித்து
சேவலும் மயிலும் மாக்கி
சாலவும் சிறந்த அமரர்
சஞ்சலம் போக்கி நின்று
மூலமா மந்திரம் தன்னை
முறைப்படி உபதேசித்தாய்
உலகெல்லாம் வியக்கும் வண்ணம்
உன் வேலினின் விந்தைகாட்டு
கலங்கிட கண்ணீர் மல்கி
கந்தசஷ்டியில் விரதம் பூண்டோர்
சாலவும் சிறந்த பேறுபெற
சண் முகா புன் சிரிப்பைக் காட்டு

விகடகவி

# ஐரோப்பாவுக்கான இலங்கை விமானசேவை விரைவில் தடை ஏற்படும் சாத்தியம்

கொழும்பு, ஒக்.27

இலங்கையின் விமான சேவையான சிறீலங்கன் எயர் லைன்ஸ் விமானங்கள் ஐரோப் பாவுக்குப் பறப்பை மேற்கொள் வதற்கான தடை வரும் அளவுக்கு அதன் சேவைகளில் குறைபாடு உள்ளது என்ற அதிர்ச்சிகரமான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அண்மையில் இலங்கையின் விமானம் எயர்பஸ் எ-340 விமானம் ஒன்று பரிஸில் இருந்து கொழும்பு நோக்கி புறப்படுவதற்கு முன்னர் அதனுடைய இயந்திரப் பகுதிக்குக் கீழே உள்ள பகுதி கழன்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அதனை பிரான்ஸ் விமானப் பொறியிலாளர்கள் திருத்திய பின் அந்த விமானத்தின் எண்ணெய் கொள்கலம் பகுதியில் கசிவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவ்வி[illegible]மானம் 9 நாள்கள் பறப்பில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தது என்ற செய்தி தற்போது தான் கசிய ஆரம்பித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த மாதம் செப்டம்பர் 23ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இதனால் திருத்த செலவு பயணிக்க இருந்த பயணிகளை தங்கவைத்து வேறு விமானங்களில் அனுப்பிய செலவு விமானம் பறப்பை தவிர்த் தால் ஏற்பட்ட நஷ்டம் என பெரும் தொகைப் பணத்தை விமான சேவை இழந்துள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறான குறைகளுடன் விமானம் கொழும்பில் இருந்து பறப்பை மேற்கொள்ள அனுமதித் ததைத் தொடர்ந்து தற்போது இலங்கை விமானங்கள் அனைத்தும் ஐரோப்பாவில் கட்டாய சோதனைக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகின் றது.

முன்னர் அத்தகைய சோதனைகள் எழுந்தமானமாகவே நடைபெற்றன.

இவ்வாறு தரக் குறைவான நிலையில் பறந்த பல விமானசேவைகள் ஐரோப்பாவுக்கு பறப்பதில் இருந்து தடைசெய்யப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் வெளியில் தெரிந்தால் சிறீலங்கன் விமானத்தில் பயணம் செய்யும் மக்கள் அதில் பறப்பை தவிர்த்து விடுவார்கள் என்ற நிலையிலேயே இச் செய்தி குறித்த இரகசியம் பேணப்பட்டுவந்தது.

அது மட்டுமன்றி ராஜபக்ஷ ஐ.நாவில் உரையாற்றிய அன்றே இச்சம்பவம் நடைபெற்றதால் இது ஒரு இலங்கைக்கு எதிரான ஐரோப்பய சதி என்று கூட சொல்லப்பட்டு இவ்விடயம் முடக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச விமானசேவை நிறுவனம் விமானத்தை பறக்க அனுமதித்த பொறியியலாலரை பணிநிறுத்தம் செய்ய பணிக்கப்பட்டுள்ளது.

எனினும் உண்மையாக பொறுப்பானவர்கள் தப்பித்துக் கொண்டுள்ள நிலையில் இத் தவறுகள் தொடர்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன என்று அச்சம் வெளியிடுகின்றனர்.

(ம)

# முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.27

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்தில் நீதிபதிகளுக்கு அவரால் இழைக்கப்பட்டதாக கூறப்படும் தவறுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது என்று கூறப்படுகிறது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவால் விசாரணைக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றின் மூலம் இந்த விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

70 ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்க[illegible] சபாநாயகரிடம் விடுத்த கோ[illegible]க்கைக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்தில் சரத் என் சில்வா, அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 11 நீதிவான்களுக்கு சட்ட விரோதமான முறையில் தண்டனை வழங்கியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# அம்பாறையில் ஐஸ்கிறீம் உண்டதால் சிறுவர்கள் 31 பேர் வைத்தியசாலையில்


கொழும்பு, ஒக்.27

அம்பாறை ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் ஐஸ்கிறீம் உண்டதனால் மயக்கமடைந்த நிலையில் 31 சிறார்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

கண்ணகிபுரம், நாவற்காடு, ஆலையடிவேம்பு போன்ற பிரதேசங்களில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் வீதி வழியாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஐஸ்கிரீம் விற்பனையில் ஈடுபட்டவரிடம் பொற்றோர்கள் ஐஸ்கிறீம்களை வாங்கி தமது சிறுகுழந்தைகளுக்கு கொடுத்துள்ளனர்.

இந்த ஐஸ்கிறீம்களை உண்ட சிறுவர்கள் சிறிது நேரத்தின் பின்னர் மயக்கமடைந்துள்ளதாகவும் இதனையடுத்து மயக்கமடைந்த சிறுவர்கள் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலை மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பெற்றோர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தாம் விசாரணை மேற்கொண்டு வருவதுடன் இந்த ஐஸ்கிறீம் வியாபாரியை தேடிவருவதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு எப்போது விடுதலை?

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர். எனினும், தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை எந்தவித முன்னேற்றமும் இன்றி நீண்டு கொண்டு போகிறது.

தீபாவளியை முன்னிட்டு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் இடம்பெற்ற நிகழ்வில் 367 முன்னாள் போராளி களைப் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் டி.எம்.ஜயரட்ன தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு ஆறு மாத காலத்தில் தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

இதேபோன்ற வாக்குறுதிகளே கடந்த காலங்களிலும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் அரசியல் வாதிகளாலும் மதத்தலைவர்களாலும் வழங்கப்பட்டன. கடைசியாக ஒரு மாதத்துக்கு முன்பு தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட வந்த ஐ.தே. கட்சி எம்.பி. ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆகியோரும் கைதிகளின் விடுதலைக்காக நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினர். ஆனால், இதுவரை எதுவுமே நடைபெறவில்லை.

ஒவ்வொரு பண்டிகைக் காலமும் ஏமாற்றம் தந்து மறைகின்றன. அடுத்த பண்டிகையின் போதாவது குடும்பத்துடன் சேருவோம் என்ற எதிர்பார்ப்புடன் தமிழ் அரசியல் கைதிகளின் காலம் கழிந்து போகிறது. நேற்றைய தீபாவளிப் பண்டிகையும் அப்படித்தான் கழிந்து போனது. 2002 யுத்தநிறுத்த ஒப்பந்தம் உட்படப் பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் விரக்தி நிலையில் இருந்து வருகின்றனர். இந்த நிலைமைக்கான பொறுப்பைத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஏற்கவேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வுப் பேச்சுக்களில் தமிழ் அரசியல் கைதிகள் மறக்கப்பட்டு வருகின்றனர்.

மகஸின் சிறையில் 220 பேரும், சி.ஆர்.பி. என்று அழைக்கப்படும் கொழும்பு விளக்க மறியல் சிறையில் 130 பேரும், பதுளையில் 16 பேரும், கண்டியில் 37 பேரும், அநுராதபுரத்தில் 80 பேரும், யாழ்ப்பாணத்தில் 27 பேரும், வவுனியாவில் 79 பேரும், நீர்கொழும்பில் 16 பேரும், களுத்துறையில் 6 பேரும், மட்டக்களப்பில் 27 பேரும், திருகோணமலையில் 26 பேரும், மொனராகலையில் 5 பேரும், வெலிக்கடைப் பெண்கள் பிரிவில் 27 பேரும், வெலிக்கடை ஆண்கள் பிரிவில் 7 பேரும் என 700க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதற்குப் புறம்பாக முன்னாள் போராளிகள் 780 பேர் காலி பூஸா சிறையில் உள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் பேராட்டம், உண்ணாவிரதம் என்று எத்தனையோ நடவடிக்கைகளை முன்னெடுத்தும் பயன் எதுவும் இல்லை. தற்பொழுது இறுதியாக சர்வமதத் தலைவர்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கும்படி இவர்கள் இந்து மாமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். சர்வமதத்தலைவர்கள் மூலமாவது தமக்கு விமோசனம் கிடைக்கலாம் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால், இவர்களின் விடுதலைக்கான சமிக்ஞை எதுவும் இதுவரை அரசிடம் இருந்து வராமை துரதிர்ஷ்டமே.

விடுதலைப் புலிகளின் முக்கிய புள்ளியான கே.பி. மற்றும் தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் போன்றோருக்கு மன்னிப்பு அளித்த அரசு -

ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்த அரசு - தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நடந்து கொள்ளும் விதம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. போராளிகளையே விடுதலைசெய்ய முடியுமானால் அவர்களுக்கு உதவிய சந்தேகத்தில் கைதான இவர்களை ஏன் விடுதலை செய்யமுடியாது?

தற்பொழுது சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் மதகுருமார் உள்ளனர். பட்டதாரிகள் உள்ளனர். கல்விமான்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். ஆகவே, இவர்களைப் பிணையிலாவது விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவர்களில் 18 வருடகாலமாக விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரும் உள்ளனர். 1996இல் கைதான றொபர்ட் மக்சிலண்ட் அவரது மனைவி மேரி என அழைக்கப்படும் திருமகள் என்போர் இன்னும் சிறையில் வாடுகின்றனர்.

2000ஆம் ஆண்டு கைதான இந்து மதகுருவான ரகுபதிசர்மா இன்னும் சிறையில் இருக்கிறார். அவரது மனைவி வசந்தியும் சிறையில்தான். கைதிகள் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டாலும் 6 மாதம், 7 மாதம், 9 மாதம் என்று நீண்டகால தவணை போடப்படுகிறது. வழக்குகள் சிங்கள மொழியில் மட்டுமே நடைபெறுகின் றன. என்ன நடக்கிறது என்பது கூட இவர்களுக்குத் தெரியாது. மிகவும் பரிதாப கரமான நிலைமை.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். அல்லது பிணையில் செல்வதற்கேனும் அனுமதிக்கப்படவேண்டும். தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு அரசியல் மூலாம் பூசுவதும், அவர்களின் விடுதலையில் கால வரையறை இன்றி அக்கறை காட்டாதிருப்பதும் அரசுக்கு மட்டுமன்றி நீதித்துறைக்கும் களங்கம் உண்டாக்குவதாகும். மொத்தத்தில் ஜனநாயகத்தை இழிவுபடுத்தி சர்வாதிகாரத்தின் முகத்தை திரைக்குப் பின்னால் காட்டுவதாகும்.

# தேசிய பாடசாலைகளில் இருக்கும் மேலதிக ஆசிரியர்களுக்கு மாற்றம்

## முதற் கட்டமாக தென்மராட்சியில் என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக்.27

தேசிய பாடசாலைகளிலுள்ள மேலதிக ஆசிரியர்கள் விரைவில் மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். தென்மராட்சிப் பாடசாலைகளில் முதற்கட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் கடந்த 21 ஆம் திகதி மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலின் போது வடமாகாண கல்விப் பணிப்பாளர் அளித்த உறுதிமொழிகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு முரணான வகையில் 20.10.2011 அன்று நடைமுறைக்கு வரவிருந்த உடற் கல்வி ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்துச் செய்யப்படவுள்ளது. தொழிற் சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடமாற்றச் சபை ஊடாக விண்ணப்பங்களை மீள்பரிசீலனை செய்து 01.01.2012 இல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றங்களை மேற்கொள்வது என மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இடமாற்ற சபைகளில் அதிபர் சங்கப் பிரதிநிதிகள் பங்குபற்றுவது கல்வி அமைச் சின் 2007 இல் விடப்பட்ட தேசிய ஆசிரியர் இடமாற்ற சுற்றறிக்கைக்கு முற்றிலும் முரணானது என மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார். அத்துடன் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப் பாளர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வன்னிப்பகுதியில் வெவ்வேறு வல யங்களில் கடமையாற்றிய ஆசிரி யர்களின் சேவைக்காலம், வலயங்களின் மொத்த பணிக்காலத்தை உள்ளடக்கிக் கணிப்பிடப்பட்டு ஆசிரியர் இடமாற்றம் நடைபெறவேண்டும் என்பதை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏற்றுக் கொண்டார். இந்த விடயத்தில் பாதிப்படைந்த ஆசிரியர்கள் எழுத்து மூல விண்ணப்பங் களை அனுப்பி வைக்கலாம் என அவர் தெரிவித்தார்.

கணவன்- மனைவியாக இருந்தால் இருவரும் ஒரே சந்தர்ப்பத்தில் வன்னியில் கடமையாற்றத் தேவையில்லை; அவர்களில் ஒருவர் தனது சொந்த மாவட்டத்தில் பணியாற்றலாம் என்ற தனது முன்னைய நிலைப்பாட்டை பணிப்பாளர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கல்வி வலயம் ஒன்றில் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 07 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரி யர்களை எதுவித தாமதமுமின்றி 01.01.2012 இல் அதே வலயத்தின் பிறிதொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பணிப்பாளர் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (உ-14)

# கேரதீவு - மன்னார் வீதிப் புரனமைப்புக்கு ரூபா 34.89 மில்லியன் ஒதுக்கீடு

வரணி, ஒக்.27

நாவற்குழி - கேரதீவு - மன்னார் வீதியைப் புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

81 கிலோ மீற்றர் தூரம் வரையான இந்த வீதி 34.89 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபை இதற்கான 'ரெண்டர்'களை கோரியுள்ளது.

(ஒ-122)

# அரச ஊழியருக்கான சிங்கள மொழி எழுத்துப்பரீட்சை சனியன்று

யாழ்ப்பாணம், ஒக்.27

அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி எழுத்துப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சிங்களம் I, II, III என்ற பிரிவுகளில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த அரச ஊழியர்களது அலுவலக முகவரிக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## எமது உலகியல் வாழ்வுக்கும் ஆத்மீக வாழ்விற்குமுள்ள தொடர்பு

எமது உலகியல் வாழ்வானது ஆத்மீக வாழ்வுடன் இசைவு பெற்றதாக இருக்க வேண்டும். நாம் எமது குடும்பத்தார் இனத்தவர் ஆகியோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்தல் வேண்டும். செய்யும் பொழுது நாம் எமது ஆத்மீகப் பாதையின்றும் விலகிச் செல்லக்கூடாது.

நாம் இந்த உலகில் இருக்கும்வரை உலகியல் சம்பிரதாயங்களை இயக்கிச் செல்லும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பாடு அவற்றுக்கு அமைய நடந்துகொள்ளவேண்டும். ஆனால், நாம் எதனை ஆற்றியபோதும் எமது வாழ்வின் ஆத்மீக இலட்சியமாக இருக்கின்ற தலைவனை எமது பார்வைக்குள் இருத்திவிட வேண்டும். அதனின்றும் அகன்று விடக்கூடாது.

மேலும் தாய், தந்தை, சகோதரன், சகோதரி, இனத்தார், செல்வம், வீடு மற்றும் ஏனையவெல்லாம் எமக்கு உரிமையானதல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ளல் அவசியம். இவையெல்லாம் நிலையற்றவை. மாறிவரும் உடம்போடு தொடர்புடையவை.



எமது சிந்தையின் சிதைவுக்கு அடித்தளமாக விளங்குவது நாம் இந்த மாறுதலடையும் உடம்பையே எமது உண்மையான 'தான்' என எண்ணுவதாகும்.

*(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)*

**சாயி சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான இடங்களில் பஸ் தரிப்பு நிலையங்கள்

## வலி.தென்மேற்குக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி, ஒக்.27

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பொது மக்களினதும் மாணவர்களினதும் நலன் கருதி முக்கியமான இடங்களில் பஸ் தரிப்பு நிலையங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

இதற்கான தீர்மானம் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க்காலச் சூழ்நிலை காரணமாகவும், பராமரிப்பின்மை காரணமாகவும் வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த பஸ்தரிப்பு நிலையங்கள் முற்றாகவும் பகுதியாகவும் சேதமடைந்த நிலையிலுள்ளதால், மக்கள் தொடர்ந்து பாவிக்கமுடியாத நிலைக்குள்ளானார்கள்.

இதனால் பயணிகள் பஸ்தரிப்பு நிலையங்கள் தெரியாமல் கண்ட கண்ட இடங்களில் நின்று பஸ்ஸை எதிர் பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

மக்களின் நிலைப்பாடு குறித்தும் பஸ்தரிப்பு நிலையம் அமைக்க வேண் டிய அவசியம் குறித்தும் உறுப்பினர் எஸ்.சிவகுமார் பிரதேச சபைக் கூட்டத் தில் விரிவாக எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து பஸ் தரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான அங்கீகாரம் வழங் கப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து வட பிராந்திய போக்குவரத் துச்சபை அதிகாரிகளின் அனுமதியுடன் தேவையான இடங்களில் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருக் கின் றன.

இதற்கான சகல ஒழுங்குகளை யும் பிரதேச சபை மேற்கொண் டுள்ளது. (த-115)

# பொலிஸாரின் ரோந்து சுன்னாகத்தில் அதிகரிப்பு

வலி.வடக்கு, ஒக்.27

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பகுதியில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் சில விரும்பத்தகாத செயற்பாடுகள் இடம்பெற்றதைக் கருத்தில் கொண்டு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த ஆகியோர் இணைந்து ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களுடன் பொலிஸாரும் இணைந்து இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

இதன் மூலம் வேண்டத்தகாத செயல்களும் குறைவடைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். (ம-86)

# வறிய மாணவருக்கு கல்வி நிதி வழங்கல்

தென்மராட்சி, ஒக்.27

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வறிய மாணவர்களுக்கான மாதாந்தக் கல்வி நிதியத்தின் கீழ் நேற்று முன்தினம் 47 மாணவர்களுக்குக் கல்வி நிதி வழங்கப்பட்டது.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சரா தாமோதரம் கல்வி நிதியத்தின் கீழ் 16 மாணவர்களுக்கு தலா 750 ரூபா வீதமும், மன்ற அங்கத்தவர்களின் மாதாந்தக் கல்வி நிதியத்தின் கீழ் 31 மாணவர்களுக்கு தலா 500 ரூபா வீதமும் கல்வி நிதி வழங்கப்பட்டன.

இந்த மாணவர்களுக்கு மாதாந்தம் 25 ஆம் திகதி கல்வி நிதி வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ம- 207)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி நகுலேஸ்வரி சர்வேஸ்வரன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்.
சாவகச்சேரி.

## தவறிவிட்டது

சரவணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த யோகராசா பாலநேசன் என்பவரது தே.அ.அட்டை (812893866V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் (தற்காலிகம்), வங்கி அட்டை மற்றும் சில பொருள்கள் கிளி/ மத்திய கல்லூரிக்கும் பரந்தனுக்கும் இடையில் கடந்த 12.10.2011 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

அருள்மணி பல்பொருள் வாணிபம், மத்திய கல்லூரி முன்பாக, கிளிநொச்சி.
தொ.பே: 021 2285660, 0774092392

## இரண்டாம் ஆண்டு நினைவில்...

மலர்வு: 28.12.1928
உதிர்வு: 17.10.2009



**அமரர் நல்லையா நாகேஸ்வரி**

(ஓய்வுபெற்ற ஆசிரியை யா/திருநெல்வேலி இந்து த.க.பா)

உங்கள் அரவணைப்பில் வளர்ந்த காலங்கள் வசந்தமாய் நிழலாடுகின்றன.

அரசடி அம்பாள் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# குற்றச் செய்திகள்

தென்மராட்சி, ஒக்.27

வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட பொலிஸார் அந்த வழியே வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டிய போது நிறுத்தாமல் சென்ற மோட்டார் சைக்கிளைத் துரத் திப் பிடித்தனர்.

இந்த நபரை விசாரித்த போது சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி போன்றவை இல்லாதமை தெரிய வந்தது.

சாவகச்சேரி பொலிஸார் மட்டுவில் வடக்கு வாசியான இந்த நபருக்கு எதி ராக சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை நேற்று முன்தினம் விசாரித்த நீதிவான் மா.கணேசராசா எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்து 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண் டணை அனுபவிக்குமாறு உத்தரவிட் டார்.

அத்துடன் பண்டத்தரிப்பு வாசியொருவர் வாகனவரி, காப்புறுதி, தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியதாக சாவகச்சேரி பொலிஸா ரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் எதிரிக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தர விட்டார். (ம-207)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 27 |
| 04 | 09 |
| 1935 | 2011 |



**அமரர் கந்தர் அருணாசலம்**

கடந்த 27.09.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டு கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.10.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சமேதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

9/7 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கோகிலதாஸ் ஜிமாலினி சகாயராபி (விஜி)



பருத்தித்துறை வீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் (Nindau) வசிப் பிடமாகவும் கொண்ட கோகில தாஸ் ஜிமாலினி சகாயறூபி (விஜி) கடந்த (19.10.2011) புதன்கிழமை சுவிஸ்ஸில் காலமானார்.

அன்னார் கோகிலதாஸின் அன்பு மனைவியும் யேசுராசா - பிலோமினா தம்பதியரின் பாசமிகு மகளும் மரியதாஸ் - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகளும் றோயித், றொக் சிக்கா ஆகியோரின் அருமைத் தாயும் விஜயன், பிறேம சீலி, வினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிறிஸ்து ராசா - விக்ரோரி ஆகியோரின் ஞானப்பிள்ளையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (27.10.2011) வியாழக்கிழமை சுவிஸ் நேரம் பிற்பகல் 4.30 மணிக்கு நிரோம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அவரின் பிறப்பிடமாகிய நெல்லியடியில் இன்று (27.10.2011) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கர வெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

தகவல்:
விஜயன் (சகோதரன்).

# கருத்தரங்கு

பீப்பிள் லீசிங் கம்பனி லிமிட்டெட் டின் பொதுப் பங்கு வழங்கல் தொடர் பான கருத்தரங்கு பாட்லீட் ரெலிக்கெயர் செக்குறிட்டீஸ் நிறுவனத்தின் அனுசர ணையுடன் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் பூரோ வில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பீப்பிள் லீசிங் கம்பனியின் யாழ். முகாமையாளர் க.ஆனந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பொதுப் பங்கு வழங்கல் தொடர்பான கருத்துக் களை யாழ்.உயர் தொழில்நுட்பக்கல் லூரியின் விரிவுரையாளர், சி.சிறிசேது பரன், பாட்லீட் ரெலிக்கெயர் செக்குறிட் டீஸ் நிறுவன ஆலோசகர் வி.நிரஞ்சன் ஆகியோர் வழங்குவர். (ஒ-10)

## காணி விற்பனைக்கு

கண்டிக்குழி விதானையார் வீதியில் [illegible] மகளிர் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்கும் [illegible] ½ குழி விஸ்தீரனமுடைய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:0774951662

## விசேட அறிவித்தல்

அன்பர்களே!

பொன்னாலை அருள் மிகு சித்திவிநாயகர் ஆலயத் துக்கு ஒரு கோபுரம் அமைக்க வேண்டும் என 2004ஆம் ஆண்டு ஒரு திருப்பணிச்சபை அமைக்கப்பட்டது. இந்தச் சபையின் முயற்சியினால் 2011 தைப்பூசத்தன்று நாள் வேலை ஆரம்பிக்கப் பெற்று கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. சிற்பங்கள் அமைப்பதும், வர்ணம் தீட்டுதலும் இனி நிகழ வேண்டும். இந்தப் பணிகளுடன் கோயில் மண்டபத் திருத்தப் பணியும் ஓரளவு மேற்கொள்ள வேண்டிய அவசியம் உண்டாகியுள்ளது. இவற்றை நிறைவு செய்து வருகிற தைமாதம் கோபுரக் கும்பாபிஷேகத்தை நிகழ்த்த வேண்டியுள்ளது. இதன் பொருட்டு இன்னும் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படுகின்றது. விநாய கப் பெருமான் அருளை விரும்புபவர்களும் திருப் பணி நிறைவில் மகிழும் சைவ மக்களும் பொருளு தவி புரிந்து இந்தப் பணியில் ஈடுபட்டு உள்ளவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என வேண்டுகின்றேன்.

அனைவருக்கும் பிள்ளையார் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
மானிப்பாய்,
கண.இ -7313890.

மேற்படி கோபுரத்திருப்பணிசபையின்
தலைவரும் ஆலய அர்ச்சகரும்
தி.பொன்னம்பலவாணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியில் வெடிபொருளை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஒக்.27

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு குடியிருப்பு பகுதிகளில் வெடிப் பொருள்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் ஏனைய பிரதேசங்களில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் நிலையில் இந்தப் பிரதேசத்தில் குடியிருப்புகள் அற்ற தென்னை மரங்கள் இல்லாத தென்னந்தோட்டங்களிலும் பனந்தோப்புகளிலும் பற்றைக் காடுகளிலும் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

குடியிருப்புப் பகுதிகளில் முதலில் வெடிபொருள்களை அகற்றி ஏனைய பகுதிகளுக்கு மக்கள் செல்லாத வகையில் வெடிபொருள்கள் அகற்றப்படாத பகுதி என அறிவித்து வெடி பொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துமாறும் கோரியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முகமாலை, இத்தாவில் வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டும் இன்னமும் மக்களை மீள்குடியமர்த்தவில்லை.

அதியுயர் பாதுகாப்பு வலயம் மற்றும் சூனியப் பிரதேசம் ஆகியவற்றினுள் அமைந்திருந்த கிளாலிப் பகுதி அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டது.

அங்குள்ள குடியிருப்பாளர்கள் தமது காணியில் வளர்ந்திருந்த பற்றைக் காடுகளை வெட்டி துப்புரவு செய்ய 35 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரை தேவையாக உள்ளதாக தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகள் உள்ள போதிலும் 800 இற்கு மேற்பட்ட குடும்பங்களே வசித்து வந்தனர்.

எனவே மக்கள் குடியிருப்புப் பகுதிகளை இனங்கண்டு அவற்றில் வெடிபொருள்களை அகற்றி மக்களை மீளக்குடியமர்த்துமாறும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# கடையில் களவெடுத்த பணத்தை எண்ணிக்கொண்டிருந்த சிறுவன்

## பொலிஸாரிடம் பிடிபட்டான்

தென்மராட்சி, ஒக்.27

இரவு கடையொன்றினுள் புகுந்த எடுத்த பணத்தை மறுநாள் காலை நவீன சந்தை மேல்மாடியில் வைத்து எண்ணிக்கொண்டிருந்த 13 வயது சிறுவன் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டான்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள தேனீர்க் கடையில் இரவு நேரம் நுழைந்த இந்தச் சிறுவன் அங்கிருந்து 13 ஆயிரம் ரூபா பணத்தையும் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கிற் காட்டுகளையும் எடுத்துச் சென்றுள்ளான்.

இந்தப் பணத்தை சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் வைத்து எண்ணிக் கொண்டிருக்கையில் பொலிஸார் கைது செய்து பணத்தையும் கிற் காட்டுகளையும் மீட்டனர்.

இந்தச் சிறுவனை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது சான்று பெற்ற பாடசாலையொன்றில் அனுமதிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் நான்காம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (த-207)

# தேசிய விதை நடுதல் செயல் திட்டம் இன்று கோப்பாயில் ஆரம்பித்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27

'திலிநெகும' தேசிய இயக்கத்தின் தேசிய விதை நடுதல் செயல்திட்டத்தின் யாழ். மாவட்ட மட்ட செயல்திட்டம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'திலிநெகும' தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் இன்று விதை நடுதல் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. 9.59 மணிக்கு இந்தச் செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் மாவட்ட மட்ட வேலைத் திட்டம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அனைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வீட்டுத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் பயிர் வகைகளுக்குரிய விதைகளே பயன்படுத்தப்படவுள்ளன. இன்றைய தினம் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராம சேவகர் பிரிவுகளிலும் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. விதை நடுதல் செயற்திட்டத்துக்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 150 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-15)



உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் போசாக்கு கண்காட்சி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சுகாதார வைத்தியதிகாரி அ.ஜெயக்குமரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விருந்தினர்கள் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் பான்ட் வாத்திய இசையுடன் மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து மங்கல விளக்கை வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், கணக்காளர் எஸ். கஜேந்திரன், யூனிசெப் நிறுவன தலைமைப் பிரதிநிதி டமஸ்கஸ்மாசெரி, வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி வி.சண்முகரத்தினம் உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தார்கள்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போசாக்கு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (ம-86)

# மீள்குடியமர்ந்த மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை தேவை

## யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.27

மக்களை அவர்களது வாழ்விடங்களில் குடியமர்த்தி விட்டால் அவர்கள் சந்தோசமாக வாழ்கின்றார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் ஊடகவியலாளர்களுக்கு சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சூழ் நிலையில் யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள், பெண்கள் வன்முறைகள், முன்னாள் போராளிகளின் சமூக ஒருங்கிணைவு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனை ஊடகங்களால் மட்டும்தான் தடுத்து நிறுத்த முடியும்.

சங்கானை பிரதேச செயலகத்தின் ஊடாக எனக்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது. சிறுவர்கள் சகபாடிகளின் தொல்லையால் பாடசாலைக்குச் செல்லாமல் விடுகின்றனர் என்பது தான் அந்த முறைப்பாடு.

அத்துடன் பாடசாலைகளில் ஆசிரியர்களினால் மாணவர்களிடத்தில் ஏற்றத்தாழ்வு காட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாங்கள் மக்களை மீளக்குடியமர்த்தினால் மட்டும் போதாது. அவர்கள் சந்தோசமாக வாழ வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் வருமானத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களை மீள்குடியேற்றி விட்டால் மட்டும் சந்தோசமாக வாழ்கின்றார்கள் என்று சொல்ல முடியாது.

பல பெண்கள் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகின்ற பொலிஸாருக்கு எதிராக எழுத்து மூலமான முறைப்பாடுகளைத் தந்திருக்கின்றார்கள்.

அதாவது தாங்கள் ஏதாவது முறைப்பாட்டை செய்யச் செல்கின்றபோது பொலிஸார் தமது தொலைபேசி இலக்கங்களைத் தருமாறு வற்புறுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்கள். அத்துடன் இவர்களது வீடு எங்கே இருக்கின்றது என்றும் கேட்பதாக குறிப்பிட்டிருந்தார்கள். சகல இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

எமது மக்கள் காலையில் தேவாரம் படிக்கின்றார்களோ இல்லையோ பத்திரிகைகள் படிக்காமல் இருக்க மாட்டார்கள். எனவே யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்கள் யாழ். மண்ணின் வரலாற்று பொக்கிஷங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். காலத்தின் கண்ணாடியாக ஊடகங்கள் இருக்க வேண்டும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஊடக தர்மத்தை நிலை நிறுத்த வேண்டும் என்றார். (ம-15-313)

# அரியாலை கிழக்கு கடலில் இறால் பிடிப்பதில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஒக்.27

அரியாலை கிழக்கு கடற்பகுதியில் இறால் பிடிக்கும் பணியில் கடற்றொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பூம்புகார் மற்றும் அதனை அண்டிய கடற்பகுதியில் இறால் பிடிப்பதில் ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அண்மையில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து கடற்றொழிலாளர்கள் இந்தப் பகுதியூடாகக் கடலுக்கு சிரமம் இன்றி சென்று இறால் பிடிப்பதில் கூடுதலாக ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பகுதியில் பிடிக்கப்படும் இறாலை வியாபாரிகள் முண்டியடித்து பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-26)

# அளவுக்கதிகமான ஆடுகளை ஏற்றிச் சென்றோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.27

அதிகளவான செம்மறி ஆடுகளை சுகாதார மற்றும் மிருக வதைச் சட்டங்களுக்கு ஏற்ப ஏற்றிச் செல்லாத லொறிச் சாரதியையும் மற்றொருவரையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர். இவர்களுக்கு 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

லொறியில் மிருக வதை ஏற்படும் விதமாக சுமார் 15 செம்மறி ஆடுகளை ஏற்றிச் சென்றனர் என்று இவர்கள் மீது குற்றப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் கரவெட்டி, யாக்கருப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். லொறியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனிடம் சந்தேகநபர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் இருவருக்கும் தலா 5,000 ரூபா வீதம் 10,000 ரூபா அபராதம் விதித்ததுடன் வாகனத்தையும் செம்மறி ஆடுகளையும் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உறவினர்கள், சக ஊழியர்கள் வாழ்த்து மழையில் நனையும் நாள். நண்பர்களுடன் சேர்ந்து கூட்டாக சில காரியங்களைச் செய்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து பளிச்சென தோற்றம் அளிப்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். ஆனந்தமான நாள்.

**இடபம்:**
மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். குல தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். வெளியூரில் வசிக்கும் சிலர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சுகமான அனுபவம் உண்டு.

**மிதுனம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும். பிள்ளைகளின் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். அயலாருக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்வீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மனக்குறைகள் தீரும் நாள்.

**கடகம்:**
உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, குடிகொள்ளும். இனிப்புகளை உண்டு மகிழ்வீர்கள். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். புத்தாடைகள் அணிந்து புதுப்பொலிவுடன் தோற்றம் அளிப்பீர்கள். நடக் குமோ, நடக்காதோ என நினைத்த விடயம் ஒன்று நடந்து விட லாம். சிலரைப் பாராட்டிப்பேசி உங்களுக்கு வேண்டியதைப் பெறுவீர்கள்.

**சிங்கம்:**
மனதில் நல்ல சிந்தனைகள், எண்ணங்கள் குடி கொள்ளும். எளியவர்கள் சிலருக்கு உதவி செய்வீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். உற வினர்களுடன் பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். வெற்றிகரமான நாள்.

**கன்னி:**
தொலைபேசி வழியில் வாழ்த்துச் செய்திகளைக் கேட்கலாம். மற்றவர்களை கேலி பேசி அதில் இன்பம் காண்பீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். எதிர்கால நலன் கருதி, முக்கிய திட்டம் போடுவீர்கள். இறைவழிபாட்டின் மூலம் இன்பம் காணலாம்

**துலாம்:**
மற்றவர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பாராத வகையில் பணவரவுகளைப் பெறலாம். விருப்பமான பலகாரங்களை சாப்பிடுவீர்கள். உறவினர்களைத் தொடர்பு கொண்டு வாழ்த்துச் சொல்வீர்கள். நண்பர்கள் சிலருடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீண்ட நாளாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:**
எண்ணிய எண்ணங்கள் எண்ணம் போல நிறைவேறும். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். சில நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்லலாம். குடும்பத்தினரின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகும்.

**தனுசு:**
சொந்த பந்தங்களுக்கு உதவி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள். கடந்த காலங்களில் உங்களை மதிக்காமல் செயற்பட்ட சிலர், இப்போது உங்களின் வீடு தேடி வரலாம். வியாபாரிகள் தொழில் நிமித்தம் அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். உங்களின் அஜாக்கிரதையால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பெயர் மற்றவர்களுக்கு செல்லலாம்.

**மகரம்:**
இறைவழிபாட்டின் மூலம் இன்பங்கள் பெருகும் நாள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களின் வீட்டுக்கு வரலாம். உறவினர்களுடன் உல்லாசமாக பொழுது போக்கு வதில் நாட்டம் செல்லும். பெரிய மனிதர்கள் சிலரின் வாழ்த்துக் களைப் பெறுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:**
வாங்க நினைத்த ஒரு பொருள் கிடைக்காமல் பல இடங்களுக்கு அலைய நேரிடலாம். உங்களை மட்டம் தட்டி சிலர் பேசலாம். வீட்டைச் சீரமைப்பதில், ஒழுங்கு படுத்துவதில் நாட்டம் செல்லும். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நன்றி மறந்த சிலரை நினைத்து மன வருத்தம் அடைவீர்கள். தண்டச் செலவு உண்டு.

**மீனம்:**
புதுத்தெம்பு, தைரியத்துடன் செயற்படும் நாள். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். பெற்றோரின் மனம் அறிந்து நடந்து கொள்ள முற்படுவீர்கள். கிடைக்குமோ, கிடைக்காதோ என் நினைத்த பொருள் எளிதில் கிடைக்கும். உங்களின் கடந்த கால அனுபவங்களை மற்றவர்களிடம் சொல்வீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

# ஆபாச படங்களைக் கட்டுப்படுத்த மிக விரைவில் கடுமையான சட்டம்

## நீதியமைச்சு தெரிவிப்பு

ஆபாசப் படங்களைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான சட்டங்கள் இயற்றப்படவுள் ளன என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நீதியமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் தெரிவித்துள்ளதாவது:

இணையம் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமானதிலிருந்து பாலியல் படங்களின் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளது. இதனால் சிறுவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். சிறுவர் பாலியல் படங்கள் பரந்த, உலக சந்தையைக் கொண்டுள்ளது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல.

எனவே, பாலியல் படங்களை இறக்குமதி செய்தல், தயாரித்தல், விநியோகித்தல், காட்சிப்படுத்துதல், ஒளிபரப்புதல், ஒலிபரப்புதல், அச்சிடுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் கட்டுப்பாடற்ற வகையில் இவற்றை அணுகுவதை கட்டுப்படுத்துவதற்கும் இப்புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

சிறுவர் பாலியல் படங்களை தயாரித்தல், பெற்றுக் கொடுக்க வழிசெய்தல், எந்த வகையிலாவது விநியோகித்தல், ஒளிபரப்புதல், கணினி முறை மையைப் பயன்படுத்தி சிறுவர் பாலியல் படங்களை பெற்றுக் கொள்ளல், சிறுவர் பாலியல் படங்களை கணினியில் அல்லது கணினித் தரவு ஊடகங்களில் களஞ்சியப்படுத்தல், வெளிப்படுத்தல் ஆகியன ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் 10 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.(வ)

# இலத்திரனியல் சாரதி அனுமதிப்பத்திரங்களை ஏழு நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளலாம்

இலத்திரனியல் சாரதி அனுமதிப்பத்திரங்களை 7 நாள்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியும் என்று போக்குவரத்து அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

வேரஹெரவிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக தினமும் 1200 விண்ணப்பங்கள் கிடைப்பதாகவும் அவற்றில் 600 விண்ணப்பங்களே தினமும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான செயன்முறைகள் இரு நாள்களில் பூர்த்தியாக்கப்படும் எனவும் விண்ணப்பதாரிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் 7 தினங்களுக்குள் தபாலில் கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

வேரஹெர மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக நீண்ட வரிசையில் பலர் காத்திருக்கின்றனர். தற்போது விண்ணப்பங்களைப் பெறுவதற்காக 8 பிரிவுகள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அதேவேளை வேறு மாவட்டங்களிலும் இந்தத் திணைக்களத்தின் கிளைகள் திறக்கப்படும் என்று அவர் கூறினார்.

# போதைப் பொருள்களை விநியோகித்தவர் கைதானார்

கண்டி, தலாத்து ஓயா, அம்பிட்டிய, ஹேவாஹெட்ட உட்படப் பல பிரதேசங்களுக்குப் போதைப் பொருள்களை விநியோகம் செய்து வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவரை மத்திய மாகாண புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து ஒன்றரைக் கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டது.

சந்தேக நபர் தம்புள்ளவில் இருந்து பெரிய அளவில் போதைப் பொருள்களைக் கடத்தி வந்துள்ளார் எனவும் இந்த வர்த்தகத்தின் பிரதான சூத்திரதாரியைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இது குறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.(வ-5)

## கைதி மரணம் குறித்து விசாரணை கோரி

# மட்டக்களப்பில் சிறைக்கைதிகள் கூரைமேல் ஏறி உண்ணாவிரதம்

மட்டு. சிறைச்சாலையிலுள்ள கைதிகள் சிலர் நேற்றுமுன்தினம் சிறைச்சாலையின் கூரையின் மேல் ஏறி திடீர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்த விளக்கமறியல் கைதியொருவர் சுகயீனம் காரணமாக மரணமடைந்தது தொடர்பில் தெளிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் இந்த உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

மேலும், பல்வேறு கோரிக்கைகளை இக்கைதிகள் முன்வைத்து இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

சிறைக்கைதிகளுக்கு சுகயீனம் ஏற்படும் போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சை வழங்கும் அதே நேரம், வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு வாராத்தில் ஒரு நாள் வருகை தரும் வைத்தியரை இரண்டு நாள்கள் வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு வருகை தரும் வைத்தியரை மாற்றி வேறு ஒரு வைத்தியர் நியமிக்கப்படல் வேண்டும் ஆகியவையே கைதிகளின் கோரிக்கைகளாகும்.

அத்துடன், தமது பிரச்சினைகளைக் கேட்பதற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதியும் சிறைச்சாலைக்கு வருகை தருவதுடன் நிலைமைகளையும் அவதானிக்க வருகைதர வேண்டும் என்ற வேண்டுகோளையும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் முன்வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 15 பேர் சிறைச்சாலையின் கூரையின் மேல் ஏறி இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். நேற்று முன்தினம் மாலை 32 பேர் கூரையின் மேல் ஏறி உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வந்தது.

# ஹிக்கடுவையில் பஸ்- மோ.சைக்கிள் விபத்து: இருவர் பலி

ஹிக்கடுவ - வேவல பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஹிக்கடுவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# தென் ஆசியர் என்ற காரணத்துக்காக எனக்கு அநீதி இழைத்து விட்டனர்

## ராஜ் ராஜரட்ணம் தெரிவிப்பு

தமக்கு அநீதி இழைக்கப்பட்டதை உணர்வதாக இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட அமெரிக்க தொழிலதிபர் ராஜ்ராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

நிதிச்சந்தை மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக ராஜ்ராஜரட்ணம் ஊடகமொன்றுக்கு செவ்வியளித்துள்ளார். தாம் நம்பிய சிலர் துரோகம் இழைத்து விட்டதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முதனிலை சந்தையான வேல் ஸ்ட்ரீடில் முதலீடு செய்த முக்கிய தென் ஆசியர்களில் ஒருவர் என்ற வகையில் பெருமிதம் அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் விசாரணைக்ளின் போது தமக்கு அநீதி இழைக்கப்பட்டதை உணர்வதாகத் தெரிவித்துள்ளார். விசாரணைகளின் போது வெள்ளையர்கள் ஒரு விதமாகவும் தென் ஆசியர்கள் ஒரு விதமாகவும் நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹிந்தவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க அனுமதி மறுப்பு

# ஆஸி. சட்டமா அதிபரின் முடிவை வரவேற்கிறார் இலங்கைத் தூதுவர்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான போர்க் குற்ற வழக்கை விசாரிக்க ஆஸ்திரேலிய அரசு அனுமதி மறுத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக அருணாசலம் ஜெகதீஸ்வரன் என்ற பொறியியலாளர் மெல்பேர்ன் நீதிமன்றத்தில் போர்க்குற்ற வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரிப்பதற்கு ஆஸ்திரேலிய சட்டமா அதிபரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

ஆனால் ஆஸ்திரேலிய அரசின் சட்டமா அதிபர் இந்த வழக்கை விசாரிப்பதற்கு அனுமதி அளிக்க முடியாது என்று அறிவித்துள்ளார்.

பொதுநலவாய உச்சி மாநாட்டுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் ஆஸ்திரேலிய அரசுக்கு உள்ள பொறுப்புகளையும், உள்நாட்டுச் சட்டத்தையும் மீறும் வகையில் இருப்பதால் இதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று ஆஸ்திரேலிய சட்டமா அதிபரின் பேச்சாளர் கூறியுள்ளார்.

அரச தலைவர்களுக்கும், தூதுவர்களுக்கும் இராஜதந்திர விலக்குரிமை இருப்பதை பொது நலவாயச் சட்டங்கள் உறுதி செய்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அரசினதும் சட்டமா அதிபரினதும் இந்த முடிவை ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்க வரவேற்றுள்ளார்.

நாம் மிகவும் நன்றி கூறுகிறோம். எவருக்கு எதிராகவும் தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது அமைப்பு ரீதியாகவோ சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை நாம் தொடர்ந்து நிராகரிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-சி)

# மஹிந்த மீதான வழக்கு விவகாரம்; அந்த நாட்டு தமிழ்க் காங். அதிருப்தி

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஆஸ்திரேலிய மெல்பேர்ன் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட போர் குற்ற வழக்கை விசாரணை செய்ய அனுமதி மறுக்கப்பட்டதை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

ஆஸ்திரேலிய அரசின் இந்த அறிவிப்பால் தாம் பெரிதும் ஏமாற்றமடைந்ததாக ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸின் தேசிய செய்தித் தொடர்பாளர் சாம் பாரி தெரிவித்துள்ளார்.

தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்ய நீதிவான் ஒருவர் திகதி குறித்த போதும் அரசியல்வாதிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்தமை வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பிறந்த பொறியியலாளரான 63 வயதுடைய அருணாசலம் ஜெகதீஸ்வரன் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போது பொதுமக்களின் வீடுகள், பாடசாலைகள், வைத்திய சாலைகள், ஆலயங்கள், சமூக நிலையங்கள் அனைத்தின் மீதும் இலங்கையின் வான், தரை, கடற்படை தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்ததாகத் தெரிவித்திருக்கும் ஜெகதீஸ்வரன், தான் 2007ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டுவரை வடக்கில் ஒரு தொண்டர் உத்தியோகத்தராகப் பணியாற்றிய போது அவற்றை நேரில் பார்த்ததாக தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இனப்படுகொலைகள், மற்றும் போர்க்குற்றங்களுக்கு தான் ஒரு கண்கண்ட சாட்சி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி குற்றவாளியா சுற்றவாளியா என்பதைத் தீர்மானிக்க வேண் டும் என்றும் அவர் மனுவினூடாக நீதிமன்றத்தைக் கோரியுள்ளார். எனினும் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர சட்டமா அதிபரின் அனுமதி தேவை என்று ஆஸ்திரேலிய பிரதமர் கூறியிருந்த நிலையில் வழக்குத் தொடர சட்டமா அதிபர் ரொபட் மிக்லேன் நேற்று முன்தினம் அனுமதி மறுத்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## 200 இறைவரி வழக்குகள் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

### அரசுக்கு 10 கோடி ரூ.நட்டம்

கொழும்பு,ஒக் 27

இறைவரியைச் செலுத்தாத வர்த்தகர்கள் மீது இறைவரித் திணைக்களம் தொடர்ந்திருந்த 200 வழக்குகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வழக்குகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்பாடுகளில் காணப்பட்ட பல்வேறு முரண்பாடுகள், குறைபாடுகள் ஆகியவற்றின் காரணமாகவே இந்த வழக்குகள் நிராகரிக்கப்பட்டன. இறைவரித் திணைக்களமே வழக்குகளை வாபஸ் பெறுவதாக தெரிவித்ததையடுத்து அவை நிராகரிக்கப்பட்டன.

மேற்படி வழக்குகள் இறைவரித்திணைக்களத்தால் வாபஸ் வழங்கப்பட்டதால் அரசுக்கு சுமார் பத்துகோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (வ-5)



தீபாவளியை முன்னிட்டு முன்னாள் போராளிகள் 367 பேர் நேற்று முன்தினம் அவரவர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த நிகழ்வு, பிரதமர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

## மேல் கொத்மலை மின் திட்டம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி

கொழும்பு, ஒக். 27

மேல் கொத்மலை நீர் மின்சாரத் திட்டத்தின் 91 சதவீத பணிகள் பூர்த்தியாகியுள்ளன என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வருட இறுதிக்குள் எஞ்சிய வேலைகள் பூர்த்தியானதும் 150 மெகாவோற் மின்சாரத்தைப் பெறமுடியும்.

இத்திட்டத்தின் பணிகள் ஐந்து கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் மின் பாவனை அதிகரித்துக் கொண்டு போவதால் அதனை ஈடுசெய்ய இத்தகைய திட்டங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஐ.தே. கட்சி அழிந்து போகும் நிலை தலைமையிலிருந்து ரணிலை நீக்கவும்

## ருக்மன் சேனநாயக்க எச்சரிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக நீக்க வேண்டும் என்று கட்சியின் முன்னாள் உப தலைவரானருக்மன் சேனநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை கட்சித் தலைமையிலிருந்து நீக்காவிட்டால் கட்சியைக் காப்பாற்ற முடியாது. பதிலாக அந்தக் கட்சி அழிவுப் பாதைக்கே செல்லும் எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ருக்மன் சேனாநாயக்க இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் கட்சி ஆதரவாளர்கள் உட்பட சகலரும் கட்சியின் தலைவரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தலைவராக ஒதுங்கிக் கொள்ளாது விட்டால் கட்சியின் சம்மேளனத்தைக் கூட்டியேனும் அவரை தலைமையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக கட்சியின் சம்மேளனத்தை கூட்டி இந்த தலைவரை நீக்குவதன் மூலம் கட்சியைக் காப்பாற்றுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேதாஸ ஆகியோரிடம் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வதாக ருக்மன் சேனாநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (வ)

# போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அமைச்சர் மேர்வின் கோரிக்கை

களனிப் பிரதேசத்தில் போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்தி போன்றவற்றை இல்லாதொழிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

களனி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

போதைப் பொருள், கஞ்சா மற்றும் கசிப்பு போன்றவற்றை தயாரிப்போர் மற்றும் விநியோகம் செய்வோருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மஹிந்த சிந்தனைக்கு அமைய செயற்பட முடியாதவர்கள் களனியில் கடமையாற்ற முடியாது.

களனிப் பிரதேசத்துக்குப் புதிதாக மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை தாம் வழங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, களனிப் பிரதேசத்தில் போதைப் பொருள் வர்த்தகம் இடம்பெற்று வருவதாகவும் பிரபல அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்களே பிரதானமாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும் சிங்கள ஊடகங்கள் கடந்த காலங்களில் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த அமைச்சருக்கு நெருக்கமாகச் செயற்பட்ட பாதாள உலக குழுத்தலைவரும், போதைப் பொருள் வர்த்தகருமான நபர் ஒருவரின் பெயர் மற்றும் புகைப்பட விவரங்களும் கடந்த காலங்களில் வெளியிடப்பட்டிருந்தன.

ஊடகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குல் சம்பவத்தில் குறித்த பாதுள உலகக் குழுத் தலைவர் தொடர்புபட்டிருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது என்றார். (வ)

## சர்வாதிகாரிகளுக்கு வழியமைக்கும் 18 ஆம் திருத்தச் சட்டம் முடிவுக்கு வரவேண்டும்

சர்வாதிகாரிகளுக்கு வழியமைக்கும் 18ஆம் திருத்தச் சட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சர்வாதிகாரி கடாபி குழாயொன்றில் உயிரிழக்க நேரிட்டது. நாய்களைப் போன்று உலகின் எந்த மூலைக்கு சென்றாலும் சர்வாதிகாரிகளுக்கு இதே முடிவுதான் ஏற்படும்.

கனவு காண்பதில் பயனில்லை. நாட்டின் மீதும் மக்களின் மீது உண்மையான கரிசனை இருந்தால் 18ஆம் திருத்தச் சட்ட மூலத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

சரத் பொன்சேகாவின் பதவிகளை இராணுவ நீதிமன்றம் நீக்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு தொடர்பான விசாரணைகளில் கலந்து கொண்ட போது சரத் பொன்சேகா இதனைக் குறிப்பிட்டுள்ளார். (வ-சி)

# காலி முகத்திடலில் சீன நிறுவனத்துக்கு விற்கப்பட்ட காணி ஒப்பந்தம் நிராகரிப்பு

காலி முகத்திடலில் சொகுசு ஹோட்டல்கள் மற்றும கடைத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக சீன நிறுவனமான கெடிக்குக்கு விற்பனை செய்வதற்காக எழுதப்பட்ட உடன்படிக்கை இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏழு ஏக்கர் காணியில் நான்கு ஏக்கரை வாங்குவதற்கு கெடிக் நிறுவனத்துக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட ஏசியா புரொஸ்பெக்டிஸ் இண்டர் நேஷனல் ஹொங்கொங் நிறுவனம் கொள்வனவு விலையாக 54.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை திறைசேரிக்குக் கொடுத்திருந்தது. உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து திறைசேரி அந்தப் பணத்தை நிறுவனத்துக்கு மீளச்செலுத்தி விட்டது.

இந்தக் காணியைக் குத்தகைக்கு வழங்க முடியுமே தவிர சுத்தக் கிரயத்துக்கு விற்க முடியாதென அரசு எடுத்த முடிவை கெடிக் நிறுவனம் ஏற்க மறுத்ததையடுத்தே உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதி வசதிகள் இல்லாததால் ஆசிரியர்கள் நெருக்கடிக்குள்

துணுக்காய், ஒக்.27

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமமான ஐயன்கன்குளத்தில் அமைந்துள்ள ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலையில் ஆசிரியர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படாததால் கல்விச் செயற்பாடுகளில் பெரும் பின்னடைவு தோன்றியுள்ளது.

இது தொடர்பாக மாணவர்களின் பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில்: போருக்கு முற்பட்ட காலப்பகுதியில் எமது பிள்ளைகள் சிறந்த முறையில் கல்வி கற்றதோடு பல துறைகளிலும் முன்னேறி வந்தனர். வன்னியில் இடம்பெற்ற போர் எல்லாவற்றையும் நாசமாக்கிவிட்டது.

தற்போது நாம் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. எமது பிள்ளைகள் மீண்டும் ஆர்வத்துடன் கல்வி கற்று வருகின்றனர்.

எமது கிராமம் பின் தங்கிய நிலையில் இருந்தாலும் பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை கல்வி கற்கக் கூடிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பாடசாலையில் 17 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இவர்களுள் ஐந்து பேர் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கி நிற்பதற்கான விடுதி வசதி எதுவும் பாடசாலையில் இல்லை. இதனால் அதிபரின் விடுதியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்கி வருகின்றனர்.

கல்வித் திணைக்களத்தினர் இவர்கள் தங்கி நிற்பதற்கான விடுதிகளை அமைத்துக் கொடுத்தால் இவர்களால் சிறந்த கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட முடியும். எமது பிள்ளைகளின் கல்வியும் முன்னேற்றமடையும் என்று கூறினார்கள். (க-415)

# உள்ளூராட்சி மன்றங்களின் கண்காட்சி 30 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, ஒக்.27

வடமாகாணத்தில் 34 உள்ளூராட்சி மன்றங்களின் கண்காட்சிகளை உள்ளடக்கியதான 'சிம்போசியம்' கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் முதலாம் திகதி வரை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணியளவில் கலை நிகழ்வுகளுடன் கண்காட்சி ஆரம்பமாகவுள்ளது.

இதனையடுத்து வவுனியா பொதுப்பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் நடைபெறவுள்ளதுடன் 34 உள்ளூராட்சி மன்றங்களும் தமது மன்றங்களின் செயற்பாடுகளை கண்காட்சியின் மூலமாக வெளிக்கொணரவுள்ளன.

இதன்போது வவுனியா நகரசபையூடாக பிளாஸ்ரிக் மீள் சுழற்சி முறை பற்றிய கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

முதன் முதலாக வவுனியாவில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-எ)

# சிறு குளங்கள் புனரமைப்பு

பூநகரி, ஒக்.27

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தில் இரு சிறு குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்கள் பயன்பெறவுள்ளனர்.

பூநகரி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட எல்லைக்கால் குளம், முலையடம்பன் குளம் ஆகிய இரு சிறு குளங்களே புனரமைக்கப்பட்டுள்ளன.

எல்லைக்கால் குளம் புனரமைக்கப்பட்டதால் கொல்லக்குறிச்சி கமக்கார அமைப்பைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்கள் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் அதிகளவு ஈடுபட்டுப் பெரிதும் பயன்பெறுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன. இதைப் போன்று முலையடம்பன் குளத்தின் கீழ் ஆலங்கேணி கமக்கார அமைப்பைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர்கள் பயன்பெறவிருக்கின்றனர். இந்தக் குளங்களின் புனரமைப்புப் பணிகளால் குளங்களின் நீர் கொள்ளளவு 25 வீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் அதிகளவு நன்மைகளைப் பெறவுள்ள இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர். (க-406)

## கடல் போல......



பெருவெள்ள நிலைமை- முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானுக்கும் கற்சிலைமடுவுக்கும் இடைப்பட்ட சாளம்பைமோட்டை என்னும் இடத்தில் மழைநீர் தேங்கி நின்று கடல் போலக் காட்சியளிக்கின்றது. (500)

# மன்னாரில் ஐ.ஓ.சி.

மன்னார், ஒக்.27

மன்னாரில் இந்தியன் ஒயில் கம்பனியால் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்று கடந்த 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் இந்த நிலையம் அமைந்துள்ளது.

இதன் திறப்புவிழா நிகழ்வின் போது அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் பாரூக், ஐ.ஓ.சி. யின் அதிகாரிகள், மன்னார் அரச அதிபர், மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-601)

# கட்டாக்காலிக் கால்நடைகளால் துணுக்காய் பிரதேசத்தில் இடையூறு

துணுக்காய், ஒக்.27

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன.

தற்போது துணுக்காய் பிரதேசத்தில் பரவலாகப் பருவ மழை பெய்து வருகின்றது. இதனால் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகள் பாடசாலைகள், பொதுச்சந்தை, வணக்க தலங்கள், வீதிகள் ஆகியவற்றில் தங்கி நிற்கின்றன.

இவற்றினால் இந்த இடங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதோடு வீதிகளில் பயணிப்போர் விபத்துக்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் பெரும்போக விவசாயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டிருக்கும் இந்த வேளையில் இந்தக் கட்டாக்காலிகளால் இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.

வயல்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இவை அனைத்தையும் தாண்டித் தமது வேலையைக் காண்பித்து வருகின்றன.

எனவே கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளைப் பட்டியிலிட்டு வளர்க்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (க-415)

# வரைபடம் தயாரித்தல்

துணுக்காய், ஒக்.27

துணுக்காய் பிரதேச சபையினர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதிகளின் விவரமடங்கிய பிரதேசத்தின் வரைபடத்தைத் தயாரிப்பதோடு வீதிகளுக்கு இலக்கமிட்டு அவற்றை ஆவணப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தையும் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வேலைத் திட்டத்துக்குப் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அருந்தவராசா தலைமை தாங்கிச் செயற்பட்டு வருகின்றார். இவருக்கு ஏனைய உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (க-415)

# மாற்றுவலுவுள்ளோருக்கான போட்டிகள் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில்

மல்லாவி, ஒக்.27

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறவிருக்கும் மாற்றுவலுவுடைய மாணவர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் கிளிநொச்சிப் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்ட போதிலும் காலநிலை காரணமாகக் கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சகல ஆயத்தங்களுடன் பொறுப்பாசிரியர்கள் சகிதம் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி வரையான பிரயாண ஒழுங்குகள் இவர்களுக்கு மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இந்தத் தகவல்களைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் வழங்கியுள்ளார். (க-425)

# சிறுவர், முதியோருக்கு கௌரவம்

முல்லைத்தீவு, ஒக்.27

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் தின விழா கடந்த 24 ஆம் திகதி உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் எஸ். ஜெயக்காந்த் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் டி.ஆர்.சி. நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் சஜி, உடையார்கட்டு மகா வித்தியாலய அதிபர் எஸ்.தயாபரன், 683 ஆவது படையணியின் தளபதி கேணல் குணரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் 100 சிறுவர்களுக்கு ஆங்கில அகராதி உட்படக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும் 50 வறிய நிலையிலுள்ள முதியவர்களுக்குப் படுகைவிரிப்பு, துவாய், ரோச் லைற் என்பன வழங்கப்பட்டன.

இந்த விழாவுக்கான அனுசரணையை டி.ஆர்.சி நிறுவனம், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் என்பன வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க- 121)

# க.பொ.த. சாதாரண தர மாணவருக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள்

பூநகரி, ஒக்.27

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளைக் கல்விக் கோட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் முடிவடைந்துள்ளன. எதிர்வரும் 29 ஆம் திகதி வரலாற்றுப் பாடத்துக்கான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. கரைச்சி கோட்ட மாணவர்களுக்கு கிளிநொச்சியிலுள்ள பாரதி வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் கண்டாவளைக் கோட்ட மாணவர்களுக்கு முரசு மோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம், பிரமந்தனாறு மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் பளைக் கல்விக் கோட்டத்தைப் பொறுத்த வரையில் பளை மத்திய கல்லூரியிலும் நடைபெற்றுள்ளதோடு எதிர்வரும் 29 ஆம் திகதியும் இதே பாடசாலைகளிலேயே நடைபெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல்களுக்குத் தேவையான அனைத்து மாதிரித் தாள்களையும் ஆலோசனைகளையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களமே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதியில் வாங்கிய பங்குகளால் நட்டம்

கொழும்பு, ஒக்.27

ஊழியர் சேமலாப நிதியைப் பயன்படுத்தி அரசு 'லாவ்ப் காஸ்' நிறவனத்தின் பெருந் தொகையான பங்குகளைக் கொள்வனவு செய்ததன் மூலம் 270 மில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது என்று ஐ.தே.கட்சி குற்றஞ்சாட்டி உள்ளது. சராசரியாக ரூபா 40 பெறுமதி கொண்ட 'லாவ்ப் காஸ்' நிறுவனத்தின் பங்கு ரூபா 48 ஆக உயர்ந்திருந்த வேளையில் அதனை அரசு வாங்கி இருந்தது. இதன் மூலம் அரசு 270 மில்லியன் ரூபாவுக்கு அரசு நட்டமடைந்தது என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா தெரிவித்தார். தற்போது லாவ்ப் காஸ் பங்கொன்றின் பெறுமதி 39 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஊழியர் சேமலாபநிதி முதலீட்டுக் கொள்கைப்படி இலங்கையின் பிரபல நிறுவனங்களின் பங்குகளையே, அதுவும் அந்த நிறுவனத்தின் 5 வீதமான பங்குகளையே அரசு கொள்வனவு செய்ய இயலுமாயிந்த போதிலும், இரண்டாம் தர நிறுவனங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த லாவ்ப் காஸ் நிறுவனத்தின் 1.6 பில்லியன் பெறுமதியான எட்டு வீத பங்குகளை அரசு கொள்வனவு செய்தமை முதலீட்டுக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது எனவும் ஹர்சா டி சில்வா கூறுகிறார்.

இது குறித்து ஊழியர் சேமலாப நிதியத்தின் உயரதிகாரி திருமதி றூபா வீரசிங்க கருத்து வெளியிடுகையில் ஒரு போதும் அத்தகைய பெரிய தொகை நட்டம் ஏற்படவில்லை என்றார். ஊழியர் சேமலாபநிதியம் தான் கொள்வனவு செய்த பங்குகளை இதுவரை விற்பனை செய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதி உயர்வடையும் வேளை அவற்றை விற்பனை செய்வதன் மூலம் இலாபம் ஈட்ட இயலும் எனவும் அதுவரை இந்தப் பங்குகள் ஊழியர் சேமலாப நிதியத்துக் குச் சொந்தமானவையா கவே இருக்கும் எனவும் தெரிவித்தார். (உ)

# அதிபர் இராசதுரை நினைவுப் பேருரை

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையின் நினைவுப் பேருரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் 'எமது கல்வி முயற்சிகள்: முடிவுறாத பயணங்கள் என்னும் தலைப்பில் நிகழ்த்துவார். (த- 319)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் கந்தஷஷ்டித் திருவிழா இன்று ஆரம்பம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் இவ்வாண்டுக்கான கந்தஷஷ்டித் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 31.10.2011 திங்கட்கிழமை வரை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பாரணையுடன் பூர்த்தியாகவுள்ள இந்தக் கந்தஷஷ்டி திருவிழா பல ஆண்டுகால இடைவெளியின் பின்னர் இம்முறை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

திருவிழா நாள்களில் தினமும் காலை 6 மணிக்கு உஷாத் கால பூசையுடன் ஆரம்பித்து காலை 9.30 மணிக்கு இடம் பெறும் காலசந்திப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு முருகப்பெருமான் வீதியுலா வருவார்.

தினமும் நண்பகல் 12 மணிக்கு உச்சிக் காலப் பூசையும் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் திருவிழாவைத் தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு அர்த்த ஜாமப் பூசை இடம்பெறவுள்ளது.

திருவிழா நாள்களில் கோயிலில் திருச்செந்தூர் புராண வாசிப்பு இடம்பெறவுள்ளது. (ம-ஞ)

# அரச இலக்கிய விருது வழங்கும் விழா குருநாகலில்

யாழ்ப்பாணம், ஒக்.27

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அரச இலக்கிய விருது வழங்கும் விழா நாளை வெள்ளிக்கிழமை குருநாகல் மாவட்டத்தில் நடைபெறும்.

இந்த விழாவுக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இரண்டு மூத்த கலைஞர்கள் அழைக்கப் படவுள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து மற்றும் வசதிகளைக் கலாசாரத் திணைக்களம் வழங்குகிறது.

யாழ்.மாட்டத்தில் உள்ள மூத்த அலுவலர்கள் இன்று 27 ஆம் திகதி வியாழக்கிழமை குருநாகலுக்குச் செல்லக் கூடியதாக விசேட பஸ் மூலம் காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படவுள்ளனர். (ம-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு/வாடகைக்கு**

குப்பிளான் வடக்கு கேணியடி வைரவர் கோயிலடியில் உள்ள 4 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

திருமதி. Y. விஜய்
தொடர்புகளுக்கு:- 0776636469

2ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
சந்திரோதயம் விமலசிங்கம்



மண்ணில் 04.07.1944 | திதி பிரதமை | விண்ணில் 19.10.2009

ஆண்டுகள் இரண்டு உருண்டு ஓடினும்
உங்கள் பாசம் நெஞ்சை உருக்குதே!
நீங்கள் வாழ்ந்த வாழ்வுதான் என்ன
நாங்கள் காண்பதெனியெப்போ... அம்மா!

என்றும் உங்கள் நினைவை சுமந்து நிற்கும்
அராலி வீதி, சங்கானை. குடும்பத்தினர்.

ஈசனின் நினைவுகள்
# ஆண்டு ஒன்று
அமரர் செல்லத்துரை ஈஸ்வரன் (லண்டன்)



அம்பனை சுன்னாகத்திலே பிறந்து
படிப்பிலே பட்டம் பலபெற்று
குடும்பத்தின் கலங்கரை விளக்காய் நின்ற
கற்பக விருட்சம் ஒன்று
காலனவன் கண்பட்டு கனகாலம்
ஆனதா இல்லை ஓராண்டுதான் என
கலண்டர் சொன்னது
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
பால்மணம் மாறாத உன்முகம்
எம்மைவிட்டகலாது

தோற்றம்: 08.01.1970
மறைவு: 06.11.2010

என்றென்றும் உம்
நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்:
தாய், சகோதரர்கள்.

# சிறப்புச் சொற்பொழிவு

வடமராட்சி, ஒக்.27

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் இடம் பெறும் கந்தசஷ்டிப் பெருவிழாவை முன்னிட்டு இன்று வியாழக் கிழமை முதல் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரை சந்நிதி யான் ஆச்சிரமத்தில் 5 தினங்கள் தொடர் சிறப்புச் சொற் பொழிவு இடம்பெறும்.

தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை 'வாக்குக்கு அருணகிரி' என்னும் தலைப்பில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-236)

## வீட்டுத் தாதியர் பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக வீட் டுத் தாதியர் பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாதாரணதரப் பரீட்சையில் 5 பாடங் களில் சித்திபெற்ற ஆண், பெண் இரு பாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி 17 வயதுக்கும் 40 வயதுக்கும் உட் பட்டவ ராக இருக்க வேண்டும். தகுதி யான விண் ணப்பதாரிகள் யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்கும் சென். ஜோன்அம்பு லன்ஸ் அலுவலகத்துக்கு இன்று சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளலாம்.

## கண்காட்சியும் விற்பனையும்

கொழும்பு, ஒக்.27

'சில்ப 2011' தேசிய கண்காட்சியும் விற் பனைச் சந்தையும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை வரை முற்பகல் 10 மணி முதல் இரவு 10 மணிவரை சிறிமாவோ பண்டார நாயக்கா கண்காட்சி மண்டபத்தில் நடை பெறவுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திசா நாயக்க ஆகியோரின் ஏற்பாட்டில் இது இடம் பெறவுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச் சர் பஸில் ராஜபக்ஷ இதில் கலந்து கொள்ளவுள்ளார். (ம-311)

**விற்பனைக்கு**

56 அச்சுக்கூட லேன் கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் மேல் மாடி வீடு மற்றும் கச்சாய்வெளி பிள்ளை யார் கோயில் அருகில் 6 ஏக்கர் தென் னங்காணி மற்றும் புலோப்பளை பிரதான வீதிக்கு அருகில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 9592051

Hunters
Trusted Quality Since 1911

ஹன்டர் அன்ட் கம்பனி பீஎல்சி

மூன்று நாள்
சேல்

சர்வதேச புகழ்பெற்ற தயரிப்பு வகைகள் குறைக்கப்பட்ட விலைகளில் வீட்டு மற்றும் தோட்ட தயாரிப்புகள், கைத்தொழில் மற்றும் மென் பொறியியல் தயாரிப்புகள், சைக்கிள்கள், உபகரணங்கள்

2011 ஒக்டோபர் 27, 28, 29
காலை 9 - மாலை 7

*at the following showroom*

யாழ்ப்பாணம்
320 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை: 021-4923112.



TREND MICRO™
TITANIUM™
ANTI VIRUS AND INTERNET SECURITY

STRONGER & FASTER PROTECTION
LIGHTER ON SYSTEM RESOURCES
ANYWHERE, ANYTIME SECURITY
MORE SOPHISTICATED PROTECTION

KEEP YOUR DATA SAFE
WITH YOUR OWN
10 GB
SPACE
AVAILABLE WITH EVERY PURCHASE OF




1 USER Rs. 1,600/=
3 USERS Rs. 2,950/=

AOC
TV'S & MONITORS




STARTING FROM Rs.28,000/-
STARTING FROM Rs. 8,400/-

MICRO PC SYSTEMS
No.115C, W.A.SILVA Mw., Colombo - 06.
Tel: 0112367405, 0114016764 Fax:011 2367675

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | : 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 021 222 5893 |
| நெல்லியடி | : கொடிகாமம் வீதி, நெல்லியடி. | 021 226 2929 |
| கிளிநொச்சி | : 85A, தொண்டமான் நகர், ஏ-9 வீதி. | 021 228 5593 |
| வவுனியா | : 73, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. | 024 222 1969 |
| திருகோணமலை | : 358, மத்திய வீதி, திருகோணமலை. | 026 222 6977 |
| கொட்டாஞ்சேனை | : 82, புதிய செட்டித் தெரு. | 011 239 5775 |
| கொழும்பு | :115 C,W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06. | 011 401 6764 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ சிகிச்சைக்கு வந்து சுற்றுலாவுக்குச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் விபத்தில் பலி

## 5 வயதுச் சிறுமி மட்டும் காயம் ஏதுமின்றித் தப்பினார்



சென்னை, ஒக்.27

சென்னையில் மருத்துவ சிகிச்சைபெற வந்த கல்கத்தாவைச் சேர்ந்த குடும்பத்தின் புதுச்சேரிக்கு காரில் சுற்றுலா சென்றனர். சுற்றுலாவை முடித்து திரும்பும் வழியில் காரும்-அரசு பஸ்சும் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேரும், கார் சாரதியும் பலியானார்கள். இவர்களுடன் பயணம் செய்த 5 வயது சிறுமி மட்டும் காயமின்றி அதிர்ஷ்டவசமாக தப்பினாள்.

மேற்கு வங்காள மாநிலம் கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் சென்னை அப்பல்லோ ஆஸ்பத்திரியில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வந்தனர். இங்கு சிகிச்சை முடிந்ததும் ஊருக்குப் புறப்படத் தயாரானார்கள். அதற்கு முன்பு புதுச்சேரிக்கு சுற்றுலா செல்ல ஆசை ஏற்பட்டது. இதனை அடுத்து வாடகைக் காரில் 8 பேர் புதுச்சேரிக்கு சென்று பல்வேறு இடங்களை சுற்றிப்பார்த்தனர்.

அதன்பின்னர் நேற்றுமுன்தினம் நண்பகல் அங்கிருந்து காரில் கிழக்கு கடற்கரை சாலை வழியாக சென்னை நோக்கி வந்து கொண்டிருந்தனர். காரை புதுச்சேரி மாநிலம் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் (வயது 51) என்பவர் ஓட்டி வந்தார். கல்பாக்கம் அடுத்த காத்தான்கடை சந்திப்பு அருகில் பிற்பகல் 3.15 மணியளவில் கார் வந்து கொண்டிருந்த போது எதிரே புதுச்சேரி அரசு போக்குவரத்துக் கழக கடுகதி பஸ் வந்தது. கண் இமைக்கும் நேரத்தில் காரும், அரசு பஸ்ஸும் நேருக்கு, நேராக பயங்கரமாக மோதின.

கார் மீது மோதிய பஸ் வீதியோர சிறிய பாலத்தில் இடித்து நின்றது. இந்த விபத்தில் கார் நொறுங்கியது. பஸ்ஸின் முன் பகுதி சேதம் அடைந்தது. விபத்தில் கார் சாரதி மாரியப்பன் மற்றும் அதில் பயணம் செய்த ஒரு பெண், ஒரு ஆண் ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர்.

விபத்து நடந்த இடத்திற்கு பொலிஸார் விரைந்து சென்று பொதுமக்கள் உதவியுடன் காரின் கதவை உடைத்து விபத்தில் சிக்கியவர்களை மீட்டனர். படுகாயங்களுடன் கிடந்த 5 பேரை செங்கல்பட்டு அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் வழியிலேயே மற்றொரு பெண்ணும் பரிதாபமாக இறந்தார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மேலும் ஒரு ஆண் இறந்தார். இதனால் சாவு எண்ணிக்கை 5 ஆக உயர்ந்தது. ஏனைய 3 பேரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார்கள். விபத்தில் அரசு பஸ் நடத்துநர் ரவிச்சந்திரன் (வயது 51) என்பவரும் படுகாயம் அடைந்து புதுச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காரில் பயணம் செய்த சுமார் 5 வயது சிறுமி எந்தவித காயமும் இன்றி அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பினாள். ஆனால் விபத்து சம்பவத்தினால் அவள் பெரும் அதிர்ச்சியடைந்து பேசமுடியாமல் மிரட்சியுடன் இருக்கிறாள். (வ)

# வங்கிகளின் வட்டி வீதம் அதிகரிப்பு பணவீக்கத்தை குறைக்க உதவும்- பிரணாப்

டில்லி, ஒக்.27

வங்கிகளுக்கான வட்டி வீதத்தை ரிசர்வ் வங்கி அதிகரித்திருப்பது பணவீக்கத்தை குறைக்க உதவும் என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

ரிசர்வ் வங்கியின் நடவடிக்கை, பணவீக்கத்தைக் குறைக்கும். அதே சமயம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும். இது கடன் செலவினங்கள் மற்றும் முதலீட்டு வளர்ச்சியிலும் பிரதிபலிக்கும். இருப்பினும், வரும் மாதங்களில் முதலீடுகளை அதிகரிப்பதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளும் ஆராயப்படும்' என்று தெரிவித்தார்.

ரிசர்வ் வங்கியின் வட்டி விகித அதிகரிப் பால், வங்கிகள் வழங்கும் கடன்கள் மற்றும் வைப்புகளுக்கான வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. வழங்கப்படும் கடன்களுக்கான வட்டிவீதம் குறைந்தபட்சம் 0.25 சதவீதம் உயரலாம் என்றும் கூறப்படுகிறது. (வ)

# கூடங்குளம் அணு உலை விவகாரத்தில் கலாமின் ஆய்வை ஏற்க முடியாது

## ஒருங்கிணைப்பாளர் அறிவிப்பு

கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரத்தில் அப்துல் கலாமின் ஆய்வை ஏற்க முடியாது என்று ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூடங்குளம் உள்ளிட்ட கடற்கரையோரக் கிராம மக்கள் தொடர் உண்ணாவிரத போராட்டங்களை நடத்திவருகின்றனர். இடிந்தகரை புனிதலூர்து அன்னை ஆலய வளாகத்தில் நடந்து வரும் உண்ணாவிரதத் தில் நேற்று முன்தினம் மக்கள் கலந்து கொண்டனர். உண்ணா விரத போராட்டத்தில் பேசிய அணுமின் நிலைய எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் பேசுகையில், அப்துல் கலாம் வாழ்நாள் முழு வதும் இந்திய அரசு சார்ந்த விஞ்ஞானி ஆவார். இந்திய- அமெரிக்க அணு ஒப்பந்தத்தின் போது, கம்யூனிஸ்ட்டுகள் மன் மோகன்சிங் அரசுக்குக் கொடுத்த ஆதரவை வாபஸ் வாங்கினர்.

அப்போது மன்மோகன்சிங் அரசு கவிழாமல் இருப்பதற்காக அமர்சிங், முலாயம்சிங் ஆகியோரிடம் பேசி சமரசத் துக்கு ஏற்பாடு செய்தவர் அப்துல் கலாம். அவர் இன்று கூடங்குளம் வந்து ஆய்வு செய்தால், அவரது முடிவு அரசு சார்ந்த முடிவாக இருக்கும். எனவே அவர் கூடங்குளம் வந்து ஆய்வுசெய்வதற்குநாம் அனுமதிக்க மாட்டோம் - என்றார். (வ)


# தீபாவளி பரிசுகளை நன்கொடையாகத் தாருங்கள் - மன்மோகன்

தீபாவளி பரிசுகளை தேசிய நிவாரண நிதிக்கு நன்கொடையாக தாருங்கள் என்று பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங் கூறியதாவது, தீபாவளிக்கு எனக்குப் பரிசுகளை தரவேண்டாம். அதற்குப் பதிலாக தேசிய நிவாரண நிதிக்கு நன்கொடை தாருங்கள் என்றார்.

பிரதமராக பதவியில் உள்ள 7 ஆண்டுகளில் தற்போதுதான் முதன் முறையாக பரிசுப் பொருள் களை அனுப்பவேண்டாம்என்று மன்மோகன் சிங் கேட்டுக் கொண்டுள்ளதாகதகவல்கள் தெரிவிக்கின்றன. தேசிய நிவாரணநிதிக்குஅளிக்கப்படும் நன்கொடை, ஆயிரக் கணக்கான மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மிகப்பெரிய இந்திய தேசியக்கொடி



நகரி, ஒக்.27

இந்தியாவில் இதுவரை இல்லாதபடி மிகப்பிரமாண்டமான தேசியக் கொடி ஒன்று ராஜஸ்தான் மாநிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த தேசியக்கொடி 48 அடி அகலமும் 72 அடி நீளமும் கொண்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இந்த கொடி தயாரிக்கப்பட்டது. ஆனால் தேசியக்கொடியை பகல்-இரவு என்று 24 மணி நேரமும் பறக்கத் தீடை விதிக்கப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து குருஷேத்திரா தொகுதி எம்.பி. நவீன் ஜிண்டால் கோர்ட்டில் வழக்கு தொடர்ந் தார். அவரது மனுவை விசாரித்த நீதிமன்றம் தேசியக்கொடியை பகல், இரவில் எப்போதும் பறக்க விடலாம் என்று தீர்ப்பளித்தது. இதையடுத்து மத்திய உள்துறையும் இந்த பிரமாண்ட தேசியக்கொடியை பகல், இரவு எப்போதும் பறக்க விடலாம் என்று அனுமதி கொடுத்தது. இந்த நிலையில் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் அந்த பிரமாண்ட தேசியக்கொடி பறக்க விடப்பட்டது. அங்குள்ள சென்டிரல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அந்தகொடியைராஜஸ்தான்முதலமைச்சர்அசோக்கெலாட் ஏற்றி வைத்தார். 100 அடி உயர கம்பத்தில் அந்த பிரமாண்ட தேசியக் கொடி பறக்க விடப்பட் டுள்ளது. இரவில் அந்த தேசியக்கொடி பறப்பதை கண்டு ரசிக்கும் வகையில் மின்னொளி வசதி செய்யப்பட்டுள்ளது. (வ)

# மோட்டார் சைக்கிள்கள் மூலம் தொடரும் தெலுங்கானா போராட்டம்

ஐதரபாத், ஒக்.27

ஐதரபாத்தில் மோட்டார் சைக்கிள்களின் மூலம் தெலுங்கானா போராட்டம் தொடர்கிறது.

தீபாவளியை முன்னிட்டு ஆந்திராவில் தெலுங்கானா போராட்டம் தற்போதைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் போராட்டத்தை வித்தியாசமான முறையில் மோட்டார் சைக்கிள்களின் மூலம் இளைஞர்கள் முன்னெடுக்கின்றனர்.

இந்த நிலையில் தெலுங்கானா பகுதியில் உள்ள ஐதராபாத் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஓடும் பெரும்பாலான மோட்டார் சைக்கிள்களில் ஜெய் தெலுங்கானா என்ற ஒலியுடன் கூடிய ஹொரன் பொருத்தப்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் சத்தம் எழுப்பும் போது ஜெய் தெலுங்கானா என்ற ஒலி காதை பிளக்கிறது.

இது குறித்து பிரகாஷ் கூறும் போது: தெலுங்கானா மாநிலத்திற்காக எத்தனையோ போராட்டங்கள் நடத்திவிட்டோம். மத்திய மற்றும் மாநில அரசுகள் செவிடன் காதில் ஊதியசங்கு போல் மௌனமாக இருக்கின்றன. அவர்களை தட்டி எழுப்புவதற்காகவே எங்களது மோட்டார் சைக்கிள்களில் ஜெய் தெலுங்கானா கோளைப் பொருத்தி உள்ளோம் என்றார்.

ஐதராபாத்தை சேர்ந்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, மோட்டார் சைக்கிள்களில் ஜெய் தெலுங்கானா ஹொரன் பொருத்துவது சட்டத்துக்குப் புறம்பானது. அதை பொருத்தி இருக்கும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (வ)

# இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஊடுருவல் அந்தமானில் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

டில்லி, ஒக்.27

இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக்கடலில் சீனாவின் ஊடுருவலை தாமதமாக உணர்ந்த இந்தியா, அந்தமான் தீவுகளில் தனது பாதுகாப்பை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது அந்தமான், நிகோபர் தீவுகள். இந்தியாவிலிருந்து மிகத் தொலைவில் இருக்கும் அந்தமான் தீவுகள், தென்கிழக்காசியாவுக்கான நுழைவு வாயிலாகவும் இருக்கிறது. இந்தியப் பெருங்கடலைத் தாண்டி இந்தியாவுக்கு வந்த எவ்வித ஆபத்தும், அந்தமானை கடந்து தான் இந்தியாவை தொடமுடியும் என்பதால், இந்தப்பகுதி மீது சீனா [illegible] சீனக்கடற்படை கப்பல் ஒன்று இங்கு உளவு பார்த்த சம்பவம் மத்திய அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், தனது தவறை தாமதமாக உணர்த்தியும் உள்ளது. இதையடுத்து தனது பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் தற்போது இந்தியா இறங்கியுள்ளது. இதை யடுத்து அங்கு 6 ஆயிரம் பாதுகாப்புப்படை வீரர்கள் கள மிறக்கப்படவுள்ளனர். இது தற்போது அங்கிருக்கும் வீரரர்களை விட 3 மடங்கு அதிகம். மேலும் ஒரு டஜன் போர் விமானங்களும் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட வுள்ளன.



இதுகுறித்து இந்திய ராணுவ பிரிகேடியர் பல்விந்தர் சிங் கூறுகையில்:

அந்தமான் தீவுக்கூட்டத்தில் 572 தீவுகள் உள்ளன். இவற்றில் பாதுகாப்புப் பணிகளுக்காக ராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரித்தார். இவர்கள் அந்தப் பகுதி மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாதுகாப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள உதவுவர் என்றும் தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி மீது வெற்றி வந்து சேரும்



கணவனும்மனைவியும் தொலைக் காட்சியில் செய்தி பார்த்துக் கொண்டிருந்த சமயம் வீட்டின் தொலைபேசி மணி அலறியது. பாய்ந்து போய் தொலைபேசியை எடுத்த மனைவி சரியாக அரைமணிநேரம் பேசி விட்டு 'வேறு வேலை இல்லை'' என்ற எரிச்சலுடன் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தாள். யார் என்று கணவன் கேட்டபோது பிழையான இலக்கம் என்றாள். தவறிய இலக்கத்துடன் 30 நிமிடங்கள் பேசும் அபாரம் தற்போது தமிழர்களுக்கு வந்துவிட்டது

அர்த்தம் இல்லாமல் அரட்டை அடிப்பதில்தான் நாம் வெற்றியைக் குவிக்கிறோம். அரை மணிக்கு மேலாக ஒரு கையில் தொலைபேசியைக் காதில் வைத்தபடி மறுகையால் வேலைசெய்கிறார்கள் எமது நாட்டு மக்கள். பஸ்ஸில், ரயிலில் நடை பாதைகளில் எங்கே பார்த்தாலும் பேச்சு... பேச்சு.. நாட்டின் முன்னேற்றம் போச்சு.... போச்சு....

வங்கியில் கணினியில் கண்ணும் கைத் தொலைபேசியில் காதுமாக ஊழியர்கள் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். கைத்தொலைபேசி என்பது ஒரு கையடக்கமான சவப் பெட்டியாகி விட்டது. வெட்டி அரட்டையில் நிகழ் காலத்தைப் புதைத்து எதிர்காலத்தை நாசமாக்குகின்றனர்.

எமது வானொலிகளிலும், தொலைக் காட்சிகளிலும் அர்த்தமற்ற அரட்டைகள் பெருகி தேசம் கண்டம் கண்டமாக வெட்டிக்கொலை செய்யப்படுகிறது. இதற்கு உடனடி விழிப்பு அவசியம். தனியார் பஸ்களில் ஒவ்வொரு இடைவெளியும் எப்படி நிரப்பப்படுகிறதோ; வெளிநாடு போகின்றவர்கள் பெட்டியில் இடுக்குகளுக்குள் கூடப் பொருள்களைத் திணித்து அடுக்கிக் கொள்வதைப் போன்று வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் விநாடிகளையும் முழுமையாகப் பயன்படுத்தப் பழக வேண்டும்.

ஒரு நல்ல கடிகாரம் திகதி, மணி, நிமிடம், விநாடி நான்கையும் காட்டுகிறது. ஆனால் சிலருக்கு திகதி மட்டுமே பயன்படுகிறது. மணி நிமிடம் விநாடி இவையெல்லாம் வீண். ஆனால் அமெரிக்கனும், ஜப்பானி யனும் மணியையும், நிமிடத்தையும் கவனமாகப் பயன்படுத்துகிறான். அதிலும் ஜப்பானியர்களுக்கு அதிலுள்ள முள்ளும் பயன்படுகிறது. காரணம் ரயில் 4 மணி முப்பது நிமிடம் பதினாறு விநாடிக்கு வரும் என்று விநாடியைக் கூட அவன்தான் அறிவிக்கிறான். இப்படிக் காலத்தைப் பயன்படுத்த நாம் பழக வேண்டும்.

மாபெரும் சிந்தனையாளர் எமர்ஸன் பற்றி ஓர் அருமையான தகவல். அவரிடம் ''உங்கள் வயது என்ன?'' என்று ஒருவர் கேட்ட போது, ''முன்னூற்று அறுபது'' என்றாராம். பக்கத்தில் இருந்தவர் அதிர்ச்சி அடைந்தார். உண்மையே பேசும் எமர்ஸனுக்குப் பொய் சொல்லும் பழக்கம் இல்லை. பின்னர் ஏன் முன்னூற்று அறுபது என்று பொய் சொல்ல வேண்டும்.

கேள்வி கேட்ட நபர் பண்பாடு கருதி '' நீங்கள் சொன்னது சரியாகக் காதில் விழவில்லை... வயது மறுபடி சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

'' ஏன் பெய் சொல்கிறீர்கள். என் வயது எப்படி முன்னூற்று அறுபது இருக்க முடியும் என்று முகத்தில் அறைந்த மாதிரி நேராகக் கேட்க வேண்டியது தானே? ஏன் சுற்றி வளைத்து கேட்கிறீர்கள்?'' என்று விஷயத்தைப் போட்டு உடைத்தார் உடைத்தார் எமர்ஸன்.

''அதேதான்... என் கேள்வி; உங்களைப் பார்த்தால் அறுபது தான் மதிக்க முடிகிறது. அப்படி இருக்க முன்னூற்று அறுபது என்கிறீர்கள்... எப்படி நம்புவது?'' என்றார் கேள்வி கேட்டவர்.

'' சுலபம்... நீங்கள் முன்னூற்று அறுபது ஆண்டுகள் வாழ்ந்தால் என்ன சாதிப்பீர்களோ அவற்றை நாதன் ஆறுபது ஆண்டுகளில் சாதித்து விட்டேன். எத்தனை வருடம் என்பது ஒரு பிரச்சனையல்ல... அதை நீ எப்படிப் பயன்படுத்துகிறாய் என்ன என்பதுதான் முக்கியம். உங்கள் அறுபது வருடங்களில் நான் முன்னூற்று அறுபது ஆண்டுகால வாழ்க்கை வாழ்ந்தி ருக்கிறேன்'' என்றார் எமர்ஸன்.

மனிதனுடைய உடலுக்குவயது ஆவது வேறு. அவன் அறிவின் வயது வேறு. அமெரிக்காவில் 25 முதல் 30 வயது நிரம்பிய ராணுவ வீரர்களின் அறிவுத் திறனைச் சோதித்த போது ஓர் ஆச்சரியமான உண்மை வெளியிடப்பட்டது. பத்து, பதன்மூன்று வயது பள்ளிச் சிறுவனின் அறிவுத் திறன், மனோ பாவம் என்னவோ அவைதான் அந்த இருபத்தைந்து, முப்பது வயதான ராணுவ வீரர்களிடம் இருந்தன. காரணம் உடலிலும், மனமும் ஒரே அளவில் வளர்வதில்லை. பெரும்பாலும் மனம் உடலைவிட விரைவாக வளர்ந்து முன்னே சென்று விடுகிறது. சிலர் பத்து வயதில் இருபது, இருபத்தைந்து வயதுக்காரருடைய திறமைகளைப் பெற்றிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் திருஞான சம்பந்தர் . வடக்கே ஆதிசங்கரர் அப்படி. ஏழு வயதில் துறவறம் பூண்டார். பதினோராவது வயதில் உபநிடதப் பேருரைகளை எழுதி முடித்தார். முப்பது மூன்று வயதுக்குள் சகல சாதனைகளையும் சமய உலகில் சாதித்த அற்புத மனிதர் ஆதிசங்கரர்.

முப்பது மூன்று வயதில் இப்போதும் பலர் வேலை தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆதிசங்கரர் தாம் வந்த வேலை முழுவதையும் மிகச் சரியாக முடித்துவிட்டு உலகம் உள்ளவரை தன்னை எவரும் மறக்க முடியாதபடி சாதித்துவிட்டுப் புறப்பட்டும் சென்றுவிட்டார். அவரோடு ஒப்பிடுவது என் நோக்கமல்ல. ஆனால் காலத்தை இப்படிப் பயன்படுத்த நமக்கு ஏன் தெரியவில்லை? என்று யோசிக்கச் சொல்கிறேன்.

**சுகி. சிவம்**

### இலங்கை நிர்வாகசேவையில் வெற்றிடங்கள்

# போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் மீளவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு மூன் றின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

இந்தத் தகவலை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உதயனுக்குத் தெரிவித்தார். இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு மூன்றின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சைக்கான விண்ணப்ப இறுதி திகதி 25.07. 2011 என்று வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தப் பரீட்சைக்கான திருத்திய விதிகள் அடங்கிய விசேட வர்த்தமான அறிவித்தல் ஒன்று அண்மை யில் வெளியிடப்பட்டது. அந்தத் திருத்திய விதியின் பிரகாரம் பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித் திகதி 7.11.2011 ஆகும்.

விண்ணப்பதாரியின் வயது எல்லை 30 வயதை அடைந்திருத்தல் ஆகாது என்றும் ஏதாவது ஒரு மொழி மூலம் பெற்றுக் கொண்ட பட்டத்துடன் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றியி ருக்க வேண்டும் என்ற திருத்தங்கள் புதிதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் விசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் மீள விண்ணப்பிக்க வேண்டுமா, இல்லையா எனக் குழப்பம் ஏற்பட்டுள்ளது. பரீட்சைக்குப் பலரும் மீளவும் விண்ணப்பித்தும் வருகின்றனர். இவ்வாறு குழப்பமடைந்த விண்ணப்பதாரிகள் தமக்குத் தெளிவை ஏற்படுத்தித் தருமாறு கோரியிருந்தனர்.

இந்த நிலையிலேயே பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்ட தகவலைக் கூறினார். (ம- 14- 22- 11)







சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் மைக்ரோ பிளாக் பிரிவால் கடந்த செவ்வாய்க் கிழமை கொட்டடி, வேலணை ஆகிய இடங்களில் நுண்கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.கஜமுகன், மைக்ரோ பினான்ஸ் பிரிவின் இயக்குநர் எஸ்.ரட்ணசூரிய, சி.ஐ.எப்.எல் இன் முகாமையாளர் இராஜ மகேந்திரசிங்க ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்குக் கடன் உதவிகளை வழங்கினர். நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு எஸ்.ரட்ணசூரிய கடனுதவியை வழங்குகிறார் எஸ்.கஜமுகன் , இராஜமகேந்திரசிங்க ஆகியோர் உரையாற்றுகின்றனர். (313)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

# நன்றி நவிலலும்

அப்பா என்று உறவாட யாரும் - இல்லையே
அன்பு மொழி பேசிவிட நீயும் - இல்லையே
ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும்
அன்பான எம் அப்பாவுக்கு நிகராகுமோ?

**பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**

26.09.2011 ஆம் திகதியன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்தும் துண்டுப்பிரசுரம் வெளியோட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (27.10.2011) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)



தோற்றம்:
15.02.1936

மறைவு:
26.09.2011

திதி:
சதுர்த்தசி

மனைவி, பிள்ளைகள்.
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8273


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ள துருக்கி அரசு

நிலநடுக்கத்தினால் பாதிக் கப்பட்டுள்ள துருக்கி மோச மான நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

துருக்கியின் கிழக்கு பிராந் தியத்தில் ஏற்பட்ட நிலநடுக் கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 450 ஆக உயர்வ டைந்துள்ளதாகவும் ஆயிரத்து 352 பேர் காயமடைந்துள்ளதாக துருக்கியின் அனர்த்த மற்றும் அவசர நிலைமைகள் தொடர்பான நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

மீட்பு பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் நிலையில், பிறந்து இரண்டு வாரங்களே ஆன குழந்தையொன்று இடி பாடுகளுக்கு மத்தியிலிருந்து இரண்டுநாள்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கு வதில் சிக்கலைத் துருக்கி அரசு எதிர்நோக்கியுள்ளது.

இந்த நிவாரணப் உதவி களுக் காக வெளிநாடுகளின் உதவிகளை எதிர்பார்ப்பதாக துருக்கி அரசு அறிவித்திருக்கும் நிலையில் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு அரசு உரிய முறையில் நிவாரணங்களை வழங்க வில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. (ந)

# ஜப்பானில் அடுத்தடுத்து நிலநடுக்கம் பீதியில் மக்கள் வீட்டை விட்டு ஓட்டம்

ஜப்பானில் அடுத்தடுத்து இரண்டு முறை ஏற்பட்ட நில நடுக்கத்தால் பொதுமக்கள் பீதியில் வீட்டை விட்டு ஓடினர்.

அதிகாலை 3 மணிக்கு ஏற் பட்ட நில நடுக்கம் ரிச்டர் அளவு கோலில்5.2, 5.3 ஆகப் பதிவாகி யுள்ளது. இவாகி நகரை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக 'வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புகுஷிமா அணுஉலை அருகே ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஜப் பான் மக்கள் பீதியில் உள்ளனர். ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனா மியால் 21,000 பேர் உயிரி ழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆங் சான் சூகிக்கு அமெரிக்கா கௌரவிப்பு



நியூயோர்க், ஒக்.27

மியன்மார் சுதந்திரப் போராட்டத் தலைவி ஆங்சாங் சூகிக்கு அமெ ரிக்கப் பல்கலைக்கழகம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

மியன்மாரில் ராணுவ ஆட் சிக்கு எதிராகப் போராடி வருபவர் ஆங் சான் சூகி. ராணுவத்துக்கு எதிராகப் போராடியதற்காக 15 ஆண்டுகள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் பல்கலைக் கழகம் அவருக்கு உரிய 'வாலன் பர்க்' விருது வழங்கிக் கௌர வித்துள்ளது. வெளிநாடுகளுக் குச் செல்ல அரசு அனுமதி வழங் காததால் இணையத்தளம் மூலம் அவர் இந்த விருதை பெற்றுக் கொண்டார். (ந)

# லிபிய பெற்றோல் நிலையத்தில் தீ; 100 பேர் சாவு

திரிபோலி, ஒக்.27


லிபியத் தலைநகர் திரி போலியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் திங்கள் கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 100 பேர் உயிரிழந்தனர்.

சிர்தே நகரில் உள்ள பெற்றோல் நிலையத்திலிருந்த எண்ணெய் தாங்கி வெடித்த தில் தீ வானளவு பரவி கொழுந்து விட்டு எரிந்தது. இதில் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந் ததாக இடைக்கால அரசின் தளபதி லெய்த் முகமது தெரி வித்தார்.

எண்ணெய் நிரப்பு நிலையத் துக்கு வெளியே பல பொது மக்கள் தங்கள் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காகக் காத்திருந்தபோதே இந்த விபத்து நிகழ்ந்தது. இதனாலேயே உயிரி ழந்தோர் எண்ணிக்கை அதிகரித் ததாகலெய்த்தெரிவித்தார்.

எண்ணெய் கிடங்கு அருகே இயங்கிக் கொண்டிருந்த இயந் திரம் ஒன்றின் நெருப்புப் பொறி காரணமாக இந்த விபத்து ஏற் பட்டதாகத் தெரிய வருகிறது.

தீ பெருமளவு பரவியதால் அதைக் கட்டுப்படுத்துவது மிக வும் கடினமாக இருந்ததாக லெய்த் மேலும் தெரிவித்தார். (ந)



ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு வந்த அமெரிக்க பாதுகாப்புத்துறைச் செயலாளர் லியோன் பனிட்டாவை(இடது) பிரதமர் யோஷிஹியோ நோடோ கைகுலுக்கி வரவேற்றார்.

# பாக்.தலைமை நீதிபதி மீது துப்பாக்கிச் சூடு

இஸ்லாமாபாத், ஒக்.27


பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியான முஸாபரா பாத்தின் தலைமை நீதிபதி மீது மர்ம மனிதன் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அவர் காயம டைந்தார்.

முஸாபராபாத் நகரப் பகுதி யின் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்து வருபவராகிய குலாம் முஸ்தபா முஹல். தன் னுடைய பாதுகாவலர்கள் உதவி யுடன் தனது வீட்டின் அருகே சென்று கொண்டிருந்தவேளை அங்கு வந்த மர்ம மனிதன் ஒருவன், தான் வைத்திருந்த துப்பாக்கியால் தலைமை நீதி பதியை சுட்டுவிட்டு உடன டியாகத் தப்பியோடி விட்டான். நீதிபதி வயிற்றில் குண்டு பாய்ந்த நிலையில் அருகில் இருந்த ராணுவ மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டதாகத் தெரிவித்தனர். இதனைய டுத்து பாகிஸ்தானின் தலைமை நீதிபதி முஹம்மது ஆசிம் கான் 24 மணி நேரத்துக்குள் மர்ம மனிதனைப் பிடிக்கும் படி உத்தரவிட்டுள்ளார். (ந)

# பக்கிங்காம் அரண்மனையை ஹோட்டலாக மாற்றுவேன்

## இளவரசர் சார்ள்ஸ் அறிவிப்பு



மன்னராகும் போது பக்கிங் காம் அரண்மனையை ஹோட் டலாக மாற்றுவேன் என இள வரசர் சார்ள்ஸ் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் சுயசரிதையை பி.பி.சி. ஒளி பரப்பாளர் ஆண்ட்ரூமார் என்ப வர் புத்தகமாக எழுதியுள்ளார். அதில், இளவரசர் சார்ள்ஸ் கடந்த 1982 ஆம் ஆண்டில் ராணி எலிசபெத்தின் அடுத்த வாரிசாக அறிவிக்கப்பட்டார். இருந்தாலும் ராணி எலிசபெத் துக்கும், அவருக்கும் இடையே ஓர் இடைவெளிஇருந்துவருகிறது.

தற்போது 62 வயதாகும் இளவரசர் சார்ள்ஸ் தான் மன் னராகும் போது பல திட் டங்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளார். முதல் கட்ட மாகத் தற்போது தான் தங்கி யிருக்கும் பக்கிங்காம் அரண் மனையில் பணி புரியும் ஊழியர் களை மாற்றிவிட்டு புதியவர் களை நியமிக்க உள்ளார். மேலும், பக்கிங்காம் அரண் மனையை அரச ஆடம்பர ஹோட்டலாக மாற்றவும் முடிவு செய்துள் ளார். அது குறித்து தனது குடும்பத்தினருடன் ஆலோ சனை நடத்தி உள்ளார்.

இந்தத் தகவல் அந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள் ளதாக டெய்லி எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது. எனினும் இந்தத் தகவலை பக்கிங்காம் அரண்மனையின்செய்தித்தொடர் பாளர் மறுத்துள்ளார். (ந)

# விமான நிலையத்திலும் புகுந்தது வெள்ளம்

## பாங்கொக்கில் ஒரு வாரத்துக்கு விமான சேவை ரத்து

பாங்கொக், ஒக்.27

தாய்லாந்து தலைநகர் பாங் கொக்கில் உள்ள டான் மூவாங் விமான நிலையத்தின் வட பகுதியிலிருந்து மழைநீர் புகுந் துள்ளதாகவும், விமான ஓடு பாதைகள் வெள்ளத்தால் சூழப் பட்டுள்ளன எனவும் தெரி விக்கப்படுகிறது.

இதையடுத்து விமான சேவை கள் ஒருவாரத்துக்கு ரத்து செய் யப்பட்டுள்ளதாக குறைந்த கட்டணத்தில் விமானசேவையை அளித்துவரும் நோக் எயர் விமான நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பட்டி சாராசின் தெரிவித்துள்ளார்.


இந்த நிலையம் இரண் டாவது விமான நிலையம் ஆகும். இதிலிருந்து தாய் லாந்தின் ஏனைய பகுதிளுக்கு விமானங்கள் செல்கின்றன. மற்றொன்று சுவர்ணபூமி என்ற இடத்தில் உள்ளது. இது சர் வதேச விமான நிலையம் ஆகும். மழை நீர் வடிய ஒரு வாரத் துக்கு மேலாகும் என்பதால் சர்வ தேச விமான நிலையமான சுவர்ணபூமியிலிருந்து விமா னங்கள் இயக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதத்தி லிருந்து தாய்லாந்தில் தொடர்ந்து வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும், இதுவரை 366 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வடபகுதிகளில் வெள்ளம் வடிந்துவந்தாலும் தலைநகர் பாங்கொக்கில் உள்ள 50 மாவட்டங்களில் 7 மாவட்டங் களில்இன்னமும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ந)

# ஜோப்ஸின் வாழ்க்கைப் புத்தகத்தை வாங்க சீனாவில் அலைமோதிய மக்கள் கூட்டம்

பெய்ஜிங் , ஒக்.27



அப்பிள் நிறுவனத்தின் இணை நிறுவுநர் ஸ்டீவ் ஜோப்ஸ் பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை சீனாவில் கடைகள் முன் நீண்ட வரிசையில் காத்திருந்து மக்கள் வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் சன் பிரான்சிஸ் கோவில் 1955இல் பிறந்த ஸ்டீவ் ஜோப்ஸ், 21 வயதில் கணினித்துறை யில் கால்பதித்து ஆப்பிள் நிறுவனத்தை நிறுவினார். கணினித் துறையில் உல கின் சிறந்த நிபுணர்களை உருவாக்கியதுடன் பல புதிய பொருள்களையும் அறிமுகப்படுத்தி புரட்சியை ஏற்படுத்திய ஸ்டீவ் ஜோப்ஸ் புற்றுநோய் பாதிப்பால் ஒக்ரோபர் 5இல் இறந்தார்.

இந்நிலையில் ஸ்டீவ் ஜோப்ஸ் வாழ்க்கைக் குறிப்புப் பற்றி 630 பக்கங்களையுடைய புத்தகம் ஒன்றை வால்டர் இஷாக்சன் என்பவர் அண்மையில் வெளியிட்டார். அதில் ஸ்டீவ் மனைவி, சகோதரி, நண்பர்கள், மருத்துவர்களிடம் திரட்டப்பட்ட தகவல்கள் மற்றும் கடைசி 2 ஆண்டுகளுக்கு மேலாக அவரிடம் நடத்தப்பட்ட நேர் காணல்கள் மூலம் கிடைத்த தகவல்கள் இடம்பெற்றுள்ளன. (ந)

# லிபிய விடுதலைக்கு ஈரான் வாழ்த்து

தெஹரான், ஒக்.27

லிபியாவின் முழுமையான விடுதலைக்கு ஈரான் வாழ்த்துத் தெரிவித்துள்ளது .

லிபிய இடைக்கால அரசின் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீலுக்கு ஈரான் வெளி யுறவுத் துறை அமைச்சர் அலி அக்பர் சலாஹி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், வெளி நாட்டுச் சக்திகளின் செல்வாக்கோ தலையீடோ இல்லாத சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன், மதத்தன்மை வாய்ந்த ஜனநாயகம் கொண்ட லிபியாவை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து, திங்கள்கிழமை செய்தி யாளர்களிடம் பேசிய ஜலீல், லிபியா ஒரு மித வாத முஸ்லிம் நாடாக விளங்கும் என்று கூறினார்.

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ராமின் மெஹ்மன் பிரஸ்ட் ... லிபிய ... தாக்குதலும் இருக்காது என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி சிவனுக்கு வெற்றிக் கிண்ணம்

சாவகச்சேரி, ஒக்.27

தென்மராட்சியிலுள்ள 523 ஆவது படைப் பிரிவினரால் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் தென்மராட்சியிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் மற்றும் படையணிகளின் கிரிக்கெட் அணிகளுக்குமிடையே நடத்தப்பட்டு வந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும், சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகமும் பங்குபற்றின. இந்தச் சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம் 89 ஓட்டங்களை பெற்று வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

இந்த நிகழ்வு தென்மராட்சி 52 ஆவது கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுதர்சிங்க தலைமையில் நடைபெற்றன. பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்தார்.

நிகழ்வில் ஆசியுரையை சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை போதகர் செல்வநாயகம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் 522 ஆவது படைத்தளபதி பிரிகேடியர் அத்துளுசில்வா 523 ஆவது படைத் தளபதி பிரிகேடியர் தெம்மட்டம்பிட்டிய சிவில் இராணுவ அதிகாரிகளான ஹரிஸ் அபயவர்த்தனா, லக்ஸ்மன், றஞ்சக்கொட, பிறேமரத்ன, ராஜபக்ஷ உட்பட இராணுவ அதிகாரிகள், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தேவசகாயம்பிள்ளை, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு அதிகாரி, கே.சிவராஜலிங்கம், யாழ். எவ்.எம்.நிறைவேற்று அதிகாரி த.உருத்திராபதி மற்றும் அரச அதிகாரிகள், படையினர், விளையாட்டு வீரர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (த-131)



யாழ்.கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையே 14வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் மூன்றாமிடத்தைப் பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் பயிற்றுநர்கள் பொறுப்பாசிரியர்களுடன். (ம-23)

# இறுதி ஆட்டத்துக்கு தெரிவான பட்டபிளை விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், ஒக்.27

சர்வதேச லயன்ஸ் கழகம் 301பி யின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்களுக்கான அரை இறுதியாட்டத்தில் பட்டபிளை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்றுக்காலை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பட்டபிளை விளையாட்டுக்கழக அணி 26:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

(ம-23)

## ஆசிரியர்களின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.27

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியிலான ஆசிரியர்களுக்கு விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் 9 மாகாணங்களிலிருந்து ஆசிரியர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குகொள்ளவுள்ளனர்.

இன்று ஆரம்பமாகும் போட்டியின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.(ம-23)

## சென்.ஜோன்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.27

சென்.ஜோண்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இடையிலான நட்பு ரீதியிலான 14, 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.


இதில் 14,16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.


18,20 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் சமநிலையில் முடி வடைந்துள்ளன.

முதலில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 6:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

18,20 வயது பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)





வடமாகாணத்தைச் சேர்ந்த 23 நவோதய பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழா அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. வடமாகாண நவோதய பாடசாலைகளின் இணைப்பாளர் கே.செல்வன் ஒலிம்பிக் தீபத்தின் சுடரை ஏற்றி மாணவர்களிடம் கையளிக்கிறார். உடற்பயிற்சியில் மாணவ,மாணவிகள் ஈடுபடுகின்றனர். (ம-23)

## நட்புரீதியிலான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும்இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(ம-23)

***

யாழ்ப்பாணம், ஒக்.27

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பர்ணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(ம-23)

# சக்கோட்டை சென். சேவியர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.27

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டம் தொடங்கி முதல் இரண்டு அணிகளும் தத்தமது அணியே வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கில் முனைப்புடன் விளையாடின. இந்த நிலையில் முதல்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் பெற்று முன்னணியில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய போது ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் 55 நிமிடத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக அணி ஒரு கோலைப் போட்டது. இதனால் ஆட்டம் 2:1 என்ற நிலையில் இருந்தது. இந்தக் கட்டத்தில் ஆட்டம் விறுவிறுப்பானது.

கரவெட்டி நவசக்தி அணி கோல் பெற முயற்சித்த போது அது கை கூடவில்லை. ஆட்ட முடிவில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

(ஒ-23)

# மகாஜனா சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.27

தெல்லிப்பழைகல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியன் ஆனது .

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதி 1:0 என்ற ரீதியில் வெற்றியீட்டியது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில்அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ஒ-23)



யாழ்ப்பாணப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான 'றக்பி' விளையாட்டுப் பயிற்சி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்தவாரம் ஆரம்பமாகியது. இந்த நிகழ்வில் பங்கு பற்றிய ஆசிரியர் ஒருவருக்கு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க 'றக்பி' பந்தை வழங்குகின்றார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ச்சி கொடுத்த சிம்பாப்வே!

மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே ஒரு இலக்கு வித்தியாசத்தில் நியுஸிலாந்தை திரில் வெற்றி கொண்டது. சகல துறை ஆட்டக்காரர்களான மல்கம் வோலர், சிக்கம்புரா இருவரும் ஆறாவது இலக்குக்காக பகிர்ந்து கொண்ட இணைப்பாட்டத்தின் மூலமே சிம்பாப்வே வரலாற்று வெற்றியைப் பதித்தது.

சிம்பாப்வேயின் புளவாயோ நகரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகள் இழப்புக்கு 328 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணியின் ரோஸ் ரெய்லர் 119, வில்லியம்சன் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்கள் எடுத்தனர். முன்னைய ஆட்டங்களில் கலக்கிய பிரன்டன் மக்கலம் 18 ஓட்டங்களையும், ஜெசி ரைடர் 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக நிக்யூப் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

மிகவும் கடினமான இலக்கை விரட்டத் தொடங்கிய சிம்பாப்வே அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிபண்டா ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் இணைந்த மஷகட்ஷா மற்றும் அணித்தலைவர் பிரன்டன் ரெய்லர் இருவரும் சிம்பாப்வேக்கு சிறப்பான அடித்தளத்தை அமைத்தனர். இரண்டாவது இலக்குக்காக 106 பந்துகளில் 100 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் இரண்டாவது இலக்கு மக்ஹேயால் வீழ்த்தப்பட்டது. அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த அணித்தலைவர் ரெய்லர் 65 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த தைபுவும் அதிரடியாக ஆட சிம்பாப்வே பலமான நிலையை நோக்கி முன்னேறியது. அணி 159 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மூன்றாவது இலக்கு சரிக்கப்பட்டது. மஷகட்ஷா 36 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து நுழைந்த முர்ஷாயா ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழக்க சிம்பாப்வே சடுதியாக ஆட்டம் கண்டது. 30 ஆவது பந்து பரிமாற்றத்தில் தைபுவ்வும் ஆட்டமிழக்க 183 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை சிம்பாப்வே இழந்திருந்தது.

120 பந்துகளில் 146 ஓட்டங்களை பெற்றாக வேண்டிய நிலையில் இணைந்த மல்கம் வோலர், சிக்கம்புரா இருவரும் சிம்பாப்வேயின் போக்கினை மாற்றியமைத்தனர். நியூஸிலாந்தின் சுழற் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை இலகுவாய் பந்தாடி ஓட்டங்களைக் குவித்தனர். துடுப்பாட்ட 'பவர்பிளே' உரிய முறையில் கையாண்டது இந்த ஜோடி. இவர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் ஓட்ட எண்ணிக்கையை விட வீசப்பட வேண்டிய பந்துகளின் எண்ணிக்கை அதிகரித்தது. வெற்றியை நோக்கி இணைப்பாட்டத்தை பகிர்ந்து கொண்டிருந்த நிலையில் ஆறாவது இலக்காக சிக்கம்புரா வீழ்த்தப்பட்டார். 84 பந்துகளில் 112 ஓட்டங்களை இந்த ஜோடி பகிர்ந்து கொண்டது. சிக்கம்புரா 43 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 47 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 44 பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் நுழைந்த மெத் 0, முஷாங்வி 7 ஓட்டங்களுடன் வெளியேற 46.5 பந்து பரிமாற்றங்களில் 308 ஓட்டங்களுக்கு சிம்பாப்வே 8 இலக்குகளை இழந்திருந்தது.

சிம்பாப்வேயின் வெற்றி கேள்விக்குறியான நேரத்தில் மல்கம் வோலர், பறிஸுடன் இணைந்து ஆடினார். பிறிஸுக்கு சந்தர்ப்பம் வழங்காமல் துடுப்பெடுத்தாட சிம்பாப்வே 49.3 பந்து வீச்சுக்களில் 328 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இறுதிப் பந்து பரிமாற்றத்தை ஓரம் வீசினார். 49.4 பந்து வீச்சில் 2 ஓட்டங்களுடன் பிரன்டன் மக்கலத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்த பந்து வீச்சை சந்தித்த மல்கம் வோலர் ஒரு ஓட்டத்தைப் பெற சிம்பாப்வே திரில் வெற்றி பெற்றது. ஒரு பந்து வீச்சு மீதமிருக்க ஒரு இலக்கினால் வெற்றி பெற்றது.

நியுஸிலாந்து தரப்பில் ஓரம் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். மல்கம் வோலர் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். சிம்பாப்வேயின் அணித்தலைவர் பிரன்டன் ரெய்லர் தொடர் நாயகன் விருது வென்றார். கடைசி ஆட்டத்தில் சிம்பாப்வே வென்றாலும் முதல் இரண்டு ஆட்டங்களில் தோற்றதால் 1-2 என்ற கணக்கில் நியூஸிலாந்திடம் தொடரை இழந்தது.

(15)

# ஆதாரம் எம்மிடமுண்டு!

சூதாட்ட புகாரில் சிக்கியுள்ள பாகிஸ்தான் அணியின் சல்மான் பட், முகமது ஆசிப்பற்கு, முகமது அமீர் எதிராக 13 ஆதாரங்கள் உள்ளதாக லண்டன் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு லோர்ட்ஸ் டெஸ்டில் 'ஸ்பொட் பக்சிங்கில்' ஈடுபட்ட பாகிஸ்தான் அணியின் அப்போதைய அணித்தலைவர் சல்மான் பட், முகமது அமிர், முகமது ஆசிப் பிடிபட்டனர்.

இவர்கள் மீது சதிசெய்து ஏமாற்றுதல், இதற்காக லஞ்சப்பணம் பெறுதல் போன்ற குற்றத்துக்காக, லண்டன் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்து வருகிறது. இந்த குற்றச்சாட்டுகளை இவர்கள் மறுத்தனர். இருப்பினும், இவர்களுக்கு எதிராக 13 ஆதாரங்கள் இருப்பதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. இதன்படி,

லோர்ட்ஸ் டெஸ்டில் முறையற்ற பந்து வீசப்பட்டது தற்செயல் தான் என்பதை நிரூபிக்கவில்லை.

கடந்த 2010, மே மாதத்தில் இருந்து, சல்மான் பட் கைத்தொலைபேசிக்கு, மசார் மஜீத்திடம் இருந்து சூயதாட்டம் தொடர்பான குறுந் தகவல்கள் உரையாடல்கள் தொடர்ந்து வந்துள்ளன.

2010, ஓகஸ்ட் 25 ஆம் திகதி இரவு 11 மணிக்கு, பத்திரிகையாளர் மசார் மகமூதுவிடம், மசார் மஜீத் சொன்னபடி, மறுநாள் முறையற்ற பந்து வீசப்பட்டது.

தவிர, போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டதால் தான், மூன்றாவது முறையற்ற பந்து வீசவில்லை.

ஓகஸ்ட் 26 ஆம் திகதி இரவு 10.11 மணிக்கு, முதல் நாளில் வீசாத முறையற்ற பந்து மறுநாள் வீசுவதாக மஜீத் உறுதியளித்தார்.

இதன் படி மறுநாள் (ஓகஸ்ட் 27), சல்மான் பட்டிடம் பேசிய பின்னர், முகமது அமிர் முறையற்ற பந்து வீசினார்.

முகமது அமிர் போதிய அனுபவம் இல்லாதவர் என்றாலும், பெரியளவில் முறையற்ற பந்து வீசினார். அதேநேரம் அதிக அனுபவம் [illegible] முகமது ஆசிப்பும் தவறு செய்தார். இதுபோன்ற 13 ஆதாரங்கள் இவர்களுக்கு எதிராக உள்ளதாக, நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனால் பாகிஸ்தான் வீரர்கள் தண்டனையில் இருந்து தப்புவது கடினம் தான் என்று தெரிகிறது. (15)

# தடுமாறும் துடுப்பாட்டம்



இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாள் முடிவில் தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி இலக்கு நஷ்டமின்றி 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 239 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் டுபாயில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சங்ககார, வெலகெதர ஆகியோரது ஆட்டத்தின் மூலம் 239 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கை அணியினர் ஆட்டம் ஆரம்பமானதிலிருந்தே தடுமாற்றத்துடன் ஆடிவந்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பரணவிதாரன 6, திரிமன்னே 1, மஹேல ஜெயவர்தன 6, அணித்தலைவர் டில்ஷான் 7, மத்தியூஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

மதியபோசன இடைவேளைக்கு ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது இலங்கை 78 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. சங்ககார மட்டும் சளைக்காமல் துடுப்பெடுத்தாடி இலங்கைக்கு நம்பிக்கை அளித்தார். இதன் பின்னர் ஆறாவது இலக்குக்காக, இலக்குக் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்தனவுக்கு பதிலாக அணியில் சேர்க்கப்பட்ட கௌசல சில்வா, சங்காவுடன் இணைந்து 54 ஓட்டங்களைப் பகிர்ந்தார். இறுதியில் கௌசல சில்வா 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த தம்மிக்க பிரசாத் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தனித்து நின்று ஆடிய சங்ககார தனது 36 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்து 8 ஆவது இலக்காக ஆட்டமிழந்து வெளியேறினார். சங்ககார 78 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை 154 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த பந்து வீச்சாளர்களான ஹேரத் மற்றும் வெலகெதர இருவரும் இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரங்களாக நின்று துடுப்பெடுத்தாடினர். பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளித்து இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இலங்கை அணியை மீட்டனர். இலங்கை அணியை 382 பந்து வீச்சுக்களில் 200 ஓட்டங்களைத் தாண்ட வைத்தனர். இறுதியில் 9 ஆவது இலக்குக்காக 75 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹேரத் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதி வரை சிறப்பாக ஆடிய வெலகெதர இறுதி இலக்காக 239 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சரிக்கப்பட்டார். 2 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 48 ஓட்டங்களை வெல கெதர இலங்கைக்காக பெற்றுக் கொடுத்தார்.

உமர்குல், சயிட் அஜ்மல் தலா 3 இலக்குகளையும், யுனைட் கான், அப்துர் ரெஹிமான் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை பாகிஸ்தான் அணி தொடங்கியது. மொஹமட் ஹபீஸ், தௌபீக் உமர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொண்டனர். ஹபீஸ் 18, உமர் 20 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

இதன்படி பாகிஸ்தான் அணி இலங்கை அணியை விட 197 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில்

# ஐ.தே. கட்சி சார்பாக தெரிவான உறுப்பினர்கள் சொத்து விவரங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.27

நடந்து முடிந்த 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டுத் தெரிவான 137 உறுப்பினர்களும் தங்களது சொத்து விவரங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல்கள் செயலகத்தில் ஒப்படைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அறிவித்துள்ளது.

23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தெரிவான உறுப்பினர்கள் தமது சொத்து விவரங்களை ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்க வேண்டும் என தேர்தல்கள் செயலகம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் 137 உறுப்பினர்களது நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறது.

(த)


## கூறுவிலை கோரல்

**எமது சபையின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பொருட்டு ஒரு மாதகாலத்துக்கு வாடகை அடிப்படையில் வான் தேவைப் படுகிறது. எனவே நல்ல நிலையிலுள்ள வாகனம் தொடர்பில் (Van) தங்கள் கூறுவிலையினைக் கீழ்வரும் முகவரிக்கு 31.10.2011 இற்கு முன் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.**

பசுபதி சிவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.


## கசிப்பு வைத்திருந்த நபருக்கு ரூபா 40 ஆயிரம் தண்டப் பணம்

கிளிநொச்சி,ஒக்.27

கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் 14 கசிப்பு போத்தல்களை தமது உடைமைகளுடன் வைத்திருந்த நபருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த திங்கட்கிழமை. கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் 40ஆயிரம் ரூபாதண்டப்பணம் விதித்ததுடன் தண்டப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 4 மாதச் சாதாரண சிறைத்தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தார்.

(ஒ-6)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. எனினும் அவர்கள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக்கை நேற்றுச் சந்தித்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

கூட்டமைப்பினரின் இந்த முதலாவது சந்திப்புடன் அமெரிக்கத் தரப்புக்களுடனான சந்திப்புகள் தொடர்ந்து நடைபெறவுள்ளதாகவும், யார் யாரை எப்பொழுது எந்த நாளில் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசுவர் என்பது குறித்துத் தகவல்களை முன்கூட்டியே அறிய முடியாத நிலை உள்ளதாகவும், தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பு அட்டவணை விவரங்கள் அனைத்தையும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மிகவும் இரகசியமாகக் கையாள்வதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் கூட்டமைப்பினர் இந்த விஜயத்தின்போது ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன், அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிங்டன் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவது பெரும்பாலும் உறுதியாகி விட்டது எனவும் தகவல்கள் தெரிவித்தன.

தமிழர்களின் ஜனநாயகத் தலைமையுடன் பேச்சுக்களை அமெரிக்கா மேற்கொள்வது குறித்து இலங்கை அரசு இராஜதந்திர ரீதியில் கடும் கண்டனத்தை வெளியிட்ட போதும் அமெரிக்கா அதனைக் கருத்தில் கொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழர் பிரச்சினை குறித்து ஆராய அங்கு அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)


## கண்ணீர் அஞ்சலி



பொறியியல் பீடத்தின் இறுதி வருடத்தில் கல்வி கற்கும் சக மாணவன் ந.இந்திரனின்
அன்புத் தந்தை

### சின்னத்தம்பி நடராசா

சிவபதமடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துவதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மொறட்டுவ பல்கலைக்கழகம்
பொறியியல் பீட மாணவர்கள்.-2008


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)



புலோலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா 25.10.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற வதனி மற்றும் அசோகன், சுபாஜினி, இந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜயந்தனின் அன்பு மாமனும், தியாகராசாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (இலக்குமிவாசம்) இன்று (27.10.2011) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இலக்குமி வாசம், புலோலி.

### திருமதி செல்லம்மா தம்பிராசா

பெரிய மதவடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி செல்லம்மா தம்பிராசா நேற்று (26.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பிராசாவின் அன்பு மனைவியும், திருமதி தவமணிதேவி- துரைராசா, திருமதி திலகவதி பாலசுப்பிரமணியம், திருமதி சந்திரசோதி கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2011) வியாழக்கிழமை தொட்டிலடி சங்கானையிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு பி.ப 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கேமலதா
ஜெயபாலன் (பேர்த்தி)

தொட்டிலடி,
சங்கானை.

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நில அளவைகள் திணைக்களம், கொழும்பு)



உடுவிலைப்பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம், அழகரத்தினம் நேற்று (26.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா, தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், தம்பிராசா மற்றும் செல்லையா, அன்னம்மா, புவனேந்திரன், விஜயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவஞானம், மகாலிங்கம் மற்றும் இரத்தினேஸ்வரி, குகனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சுந்தரவல்லி, அமுதவல்லி, பரமானந்தவல்லி, காலஞ்சென்றவர்களான சித்தானந்தன், புவனேஸ்வரன்மற்றும் அருட்செல்வன், பாஸ்கரன், பத்மசீலன், சத்தியசீலன், ஜெயசீலன், மணிலாதேவி, சாந்தினி காலஞ்சென்ற குணசீலன் மற்றும் சுகந்தினி ஆகியோரின் சிறிய தந்தையும், உதயகுமாரி, உதயகுமார், தயாழினி, தர்சிகா, விஜிதா, சுதர்சன், ஜெயந்திரன், சந்திரலதா, ஜெயலதா, யசீந்திரா, சீதா, சுசி, ஆகியோரின் பெரிய தகப்பனும் விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன், தேவகி, சிறிரஞ்சன், சுதர்சன், காயத்திரி, பிரசன்னா, பிரகாசினி, ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2011) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr.சி.வை.செல்லையா
வை.புவனேந்திரன்
(சாமியண்ணை - சகோதரர்கள்)

டச்சு வீதி,
உடுவில்.

### திருமதி கனகசபை பரமேஸ்வரி



காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும், கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரமேஸ்வரி நேற்று (26.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், நாகேஸ்வரி, கமலாதேவி, பத்மநாதன், நவரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயும், கால்ஞ்சென்ற தங்கராசா மற்றும் சிவபாலன், சித்திரா, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சசிகலா- மோகனதாசன், சதீஸ்குமார்(அப்பன்) யசோதா, குகநேசன்(கண்ணன்) சூரியகலா, மேனகா, சோபிகா, பிருந்தா, லக்சிகா, பிரசாந்தன், சுதர்சினி, கஜேந்திரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கோபிநாத், சுகாசினி, கோபிராம், சகானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், செல்லம்மா, காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் பரஞ்சோதி(கொழும்பு), அருணாசலம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2011) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கருங்காலி,
காரைநகர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
08.04.1941

இறப்பு
07.10.2010

அமரர்

### இராசையா மயில்வாகனம்

நாளை (28.10.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் தந்தையின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சிவகுரு(மருமகன்)

நாச்சிக்குடா,
விசுவமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயத் தலைவர்களின் அடுத்த மாநாடு இலங்கையில்

மனித உரிமை மீறல் விடயங்கள் கவலையளிக்கின்ற போதும் பொதுநலவாய நாட்டுத் தலைவர்களின் அடுத்த மாநாடு இலங்கையில் இடம்பெறும் என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

எனினும் மாநாட்டை நடத்தும் நாடே உறுப்பு நாடுகளுக்கு தனிப்பட்ட அழைப்பை விடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் பொதுநலவாய நாட்டுத் தலைவர்கள் மாநாடு நடத்தப்படக்கூடாதென ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மால்கம் ஃப்ரேசர் விடுத்துள்ள கோரிக்கைக்கு ஆதரவு கிடைத்தால் அதனை ஒத்திவைப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என கெவின் ரூட் குறிப்பிட்டார்.

(த)

# மாநாட்டை இலங்கையில் நடத்த அரச சார்பற்ற அமைப்புகள் எதிர்ப்பு

இலங்கையில் பொது நலவாய நாடுகளின் அமர்வை நடத்த அனுமதிக்க கூடாது என அரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டிணையம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி, அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசு தொடர்ந்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுவருகின்றது. அவர்களின் நடவடிக்கைகளில் இது வரை மாற்றம் தெரியவில்லை ஆகவே 2013 ஆம் ஆண்டு பொது நலவாய தலைவர்களின் உச்சிமாநாட்டினை இலங்கையில் நடத்தும் முடிவை மாற்ற வேண்டும், அல்லது அந்த மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என அந்த அறிக்கை மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

போரம் ஏசியா, ஆசிய சட்ட வளங்கள் மன்றம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், மக்கள் பங்களிப்பிற்கான சர்வதேச மையம், பொதுநலவாய மனித உரிமைகள் மன்றம், பொதுநலவாய ஊடகவியலாளர் அமைப்பு, மனித உரிமைகளுக்கான சட்ட மையம், ஹியூமன் ரைட்ஸ் வொட்ச், சர்வதேச நெருக்கடிகள் குழு, போன்ற முக்கியமானதும், செல்வாக்கு மிக்கதுமான பல அமைப்புகள் இதில் கையொப்பம் இட்டுள்ளன.

(த)

# ஆஸ்திரேலிய தடுப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தடுத்து நிகழ்ந்த நான்கு தற்கொலைகளை அடுத்து கூரை மீதேறிப் போராட்டம் நடத்தியவர்களில், இன்று மரணமான இளைஞரும் ஒருவராவார்.

சூட்டி என்று நண்பர்களால் அழைக்கப்பட்ட இவர் அனைவருடனும் நட்புடன் பழகக் கூடியவர் என்றும், அனைவருக்கும் உதவும் மனப்பாங்குடையவர் என்றும் அகதிகளுக்கான நடவடிக்கைக் கூட்டமைப்பின் பேச்சாளர் இயன் றின்ரோல் தெரிவித்துள்ளார்.

எனினும், இவரது முழுப் பெயர் மற்றும் சொந்த இடம் பற்றிய தகவல்களை ஆஸ்திரேலிய அதிகாரிகள் இன்னமும் வெளியிடவில்லை.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சமய விழாவில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டதால் இவர் வெறுப்படைந்திருந்தார் என்றும், அதுபற்றி நண்பர்களுடன் பேசியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இவர் இது தொடர்பாக விண்ணப்பம் செய்தது தனக்குத் தெரியும் என்றும், ஆனால், அவரது விண்ணப்பத்தை அதிகாரிகள் நிராகரித்து விட்டனர் என்றும் அகதிகளுக்கான நடவடிக்கைக் கூட்டமைப்பின் பேச்சாளர் இயன் றின்ரோல் குறிப்பிட்டுள்ளார்.

மரணமான இளைஞரின் உறவினர்கள் வெளிநாட்டில் இருக்கின்றனர் எனவும், அவர்களுக்குத் தகவல் பரிமாற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் ஆஸ்திரேலிய பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நடுத்தர வயதையுடைய இந்த இளைஞரின் அடைக்கலக் கோரிக்கை மூன்று மாதங்களுக்கு முன்னர் ஏற்கப்பட்டிருந்தது.

ஆனாலும், பாதுகாப்பு அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தினால் அவர் விடுவிக்கப்படாமல் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் தேடிய இவர், முன்னதாக வில்லாவூட் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவருடைய இளைய சகோதரன் இலங்கையில் வாழ்கிறார் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனிடையே இவரது மரணம் மிகவும் வருந்தத்தக்க நிகழ்வு என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் குடிவரவு அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் தெரிவித்துள்ளார். ,

(த-சி)

# இத்தாலி வேலைவாய்ப்பில் மோசடி இடம்பெற வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை

இத்தாலியில் வேலை வாய்ப்புக்காகப் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கான உடன்படிக்கையைப் பயன்படுத்தி மோசடியாளர்கள் செயற்பட வாய்ப்புகள் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையினை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் விடுத்துள்ளது.இத்தாலி செல்வதற்காக நிதிகளை அறவிடும் மோசடியாளர்களிடம் சிக்க வேண்டாம் எனவும் கோரப்பட்டது. 2013ஆம் ஆண்டு வரை நாட்டில் பயிற்சி பெற்ற பணியாளர்களே இத்தாலிக்குச் செல்ல முடியும் என்ற உடன்படிக்கை இலங்கை மற்றும் இத்தாலி அரசுக்கிடையே அண்மையில் கைச்சாத்தானது.

இதனை அடிப்படையாக கொண்டு மோசடியாளர்கள் சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(சி)

# நல்லிணக்க ஆணைக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் போராளிகளின் புனர் வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆஸ்திரேலியப் பிரதமரிடம் ஜனாதிபதி மஹிந்த விளக்கினார்.

அத்துடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் ஆணைக்குழுவினால் வெளியிடப்படவுள்ள இறுதி அறிக்கை குறித்தும் ஜனாதிபதி இதன்போது விளக்கமளித்திருக்கிறார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து, அந்த நாடுகளின் பிரஜைகளாகத் தகுதிகளை உறுதிசெய்துகொண்டு, நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தஞ்சம் புகுந்திருக்கின்றனர் என்றும் ஜனாதிபதி இக்கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கையின் நடப்பு விவகாரம்தொடர்பாகதெளிவுபெற வேண்டியவர்களுடன் பேச்சு நடத்தவும் தான் தயாராக உள்ளேன் என்று ஆஸ்திரேலியப் பிரதமரிடம் ஜனாதிபதி மஹிந்த கூறியுள்ளார். (த-சி)

# உள்ளூராட்சித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழுவினர் விரைவில் தமது பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர் என்றும், அரசின் இந்த நடவடிக்கையால் அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலில் எதுவித தாக்கமும் ஏற்படாது என்றும் கூறப்படுகின்றது.

மேற்படி உயர்மட்டக் குழு ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அரசு அந்த ஆலோசனைகள் உள்ளடங்கிய அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் என அரச தரப்பு சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது உள்ள தேர்தல் முறைமைகளில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என அரச தலைமைப் பீடத்துக்கு பல்வேறுத் தரப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள் மற்றும் அழுத்தங்களையடுத்து அரச தலைமைப்பீடம் தேர்தல் முறைமையில் மாற்றம்கொண்டுவருவதற்கு முஸ்தீபு செய்துள்ளது.

குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையில் மாற்றம்கொண்டுவரப்பட்ட பின்னர் விருப்பு வாக்குமுறையும் நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என அரசதகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் தினத்தன்று முல்லேரியாவில் இரு அரசியல் குழுக்களிடையே இடம்பெற்ற துப்பாக்கி சமரில் ஜனாதிபதியின் ஆலோசகரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

அத்துடன்,அரச தரப்பு எம்.பி.துமிந்த சில்வா உட்பட 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

தேர்தல் காலங்களில் இவ்வாறான கொடூரச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு விருப்பு வாக்குமுறைமையே பிரதான காரணம் எனச் சுட்டிக்காட்டிய முக்கிய அரசியல் வாதிகள் ,தேர்தல் முறைமையில் மாற்றம் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்தே ஆரம்பக் கட்டமாக உள்ளூராட்சிசபைத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரும் திட்டத்தை அரசு துரிதப்படுத்தியுள்ளது. அதேவேளை,உள்ளூராட்சிசபைத் தேர்தல் முறைமையில் அரசு மாற்றம்கொண்டுவருவதை பலர் விமர்சித்துள்ளனர்.இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கின்றது எனவும் குற்றம்சாட்டியுள்ளனர்.

உள்ளூராட்சிசபை சட்டத்தின் பிரகாரம் அதிக ஆசனங்களைப் பெற்றக் கட்சி ஆட்சியை முன்னெடுக்கலாம். கூட்டணி ஆட்சி அமைக்க முடியாது.கொழும்பு மாநகரசபை இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும். எனினும்,கொழும்பு மாநகரசபையைக் குறிவைத்தே அரசு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(த-சி)

# ஏழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேரஹெர மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக நீண்ட வரிசையில் பலர் காத்திருக்கின்றனர். தற்போது விண்ணப் பங்களைப் பெறுவதற்காக 8 கவுண்டர்கள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அதேவேளை வேறு மாவட்டங்களிலும் இத்திணைக்களத்தின் கிளைகள் திறக்கப்படும் என அவர் கூறினார்.

(த)

# போர்க்குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலியா சென்றுள்ள நிலையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை குறித்து முறையான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டுமானால், அது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்த ஆஸ்திரேலியா ஆதரவு அளிக்காமை குறித்தும் அதன் முன்னாள் பிரதமர் விமர்சித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களைக் கருத்திற் கொண்டு போர்க்குற்ற விசாரணையில் ஆஸ்திரேலிய அரசு மென்மையான போக்கைக் கடைப்பிடிக்குமானால் ஆஸ்திரேலியா முன்னர் தெரிவித்த கூற்று [illegible] [illegible] என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(த-சி)

# வடக்கில் ஆரவாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறப்பட்டாலும் கூட தமிழ் மக்களின் மத்தியில் இன்னும் மகிழ்ச்சி ஏற்படவில்லை. ''வன்னி முற்றுகையில் தங்களின் குடும்ப உறவுகளை இழந்தவர்கள், மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் இன்னும் கூட அந்த பேரிழப்பை, சோகத்தை மறந்து விடவில்லை. அவர்களால் எப்படி வெடி கொளுத்தி பண்டிகையைக் கொண்டாட முடியும்?'' என்கின்றனர் மக்கள்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு முதல் குடாநாட்டில் கடந்த காலங்களைப் போலன்றி இடையிடையே பட்டாசு வெடிச் சத்தங்கள் கேட்டன. இளைஞர்கள், சிறுவர்கள் வெடிகொளுத்தி மகிழ்ந்த போதும் வீடுகளில் அநேகமாக பெரியவர்கள் தீபாவளித் திருநாளை அமைதியாகவே கொண்டாடினர்.

இது இவ்வாறிருக்க, மதுப்பிரியர்களின் அட்டகாசங்கள் இம்முறை சகிக்கமுடியவில்லை. எங்கும் வீதியோரங்களில் அவர்கள் சரிந்து முடங்கிக் கிடந்தனர். அவை சகிக்க முடியாத காட்சிகளாக இருந்தன. (ஒ-86-26)

# கைதிகளைத் தடுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்தார். ஓகஸ்ட்டில் இவர் ஓர் அகதி என கணிப்பீடு செய்யப்பட்டார்.

இது ஆஸ்திரேலிய பாதுகாப்புப் புல்னாய்வு அமைப்பின் விசாரணைக்காக காத்திருக்கும் 462 பேரில் இவரும் ஒருவராக இருந்தார்.

தற்கொலை புரிந்து கொண்டவரின் விடயம் ஒரு சிக்கலானது.

இங்குள்ளவர்கள் பல நிலைப்பாடுகளில் உள்ளவர்கள். அவர்களில் இவரும் ஒருவர். இவர் தேசிய பாதுகாப்பிலிருந்து தப்புவதற்காக இம்முயற்சியில் ஈடுபட்டவரா என்பதையும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு நிறுவனம் பரிசீலிக்க வேண்டும் என்றும் போவென் புதன்கிழமை சிட்னியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக பொருத்தமான பாதுகாப்பு முகவர் நிறுவனத்துடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தான் ஆஸ்திரேலிய பாதுகாப்புப் புலனாய்வு நிறுவனம். அதன் அறிவுரை இந்தத் தற்கொலை விவகாரத்தில் பொருந்தாது என்றும் அவர் குறிப்பிட்டார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27 ஒக்ரோபர் 2011 வியாழக்கிழமை

# தொடர்ந்து இணைந்து செயற்படுமாயின் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## பொதுநலவாய அமைப்பின் செயலாளர் தெரிவிப்பு

இலங்கை அரசு தொடர்ந்து தம்முடன் இணைந்து செயற்படுமாயின் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் ஷர்மா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொதுநலவாய அமைப்பு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது பொதுநலவாய அமைப்பின் அடிப்படை நோக்கங்களில் ஒன்று. அதனைப் பாதுகாப்பதற்காக இந்த அமைப்பின் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். மனித உரிமைகள் தொடர்பில் பல தடவைகள் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் பொதுநலவாய அமைப்பில் மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவரை நியமிக்கும் பிரேரணைக்கு அமைப்பின் உறுப்பு நாடுகளான இந்தியாவும், தென்னாபிரிக்காவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இம்முறை பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டை நடத்தும் ஆஸ்திரேலியாவின் ஒத்துழைப்புடன் அது தொடர்பிலான பிரேரணையொன்று மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை மீது சர்வதேச மட்டத்தில் விடுக்கப்படும் அழுத்தங்களை இலங்கை அரசு ஏற்கனவே மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லக்ஷ்மன் கதிர்காமர் கொலை சந்தேக நபர் எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பான தகவல்களை மறைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக பிணையாளிகள் நீதிமன்றுக்கு தெரிவித்துள்ளன.

நடராஜா சிவராஜா அல்லது அம்பலன் எனும் இச்சந்தேக நபர், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரை கொலை செய்ய சதி இடம்பெறுவதாகத் தெரிந்தும் அத்தகவலை படையினருக்கு அறிவிக்காமல் மறைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணை மேல் நீதிமன்ற நீதியரசர் தீபாலி விஜேசுந்தர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பிணையாளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி.எஸ். மகாலிங்கம், சந்தேக நபர் மலேசியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்றும் அவரை அடுத்த விசாரணைத் தினத்தில் நீதிமன்றில் ஆஜர்படுத்தும் பொறுப்பை பிணையாளிகள் ஏற்றுக்கொள்வர் எனவும் கூறினார்.

இதனையடுத்து இவ்வழக்கு டிசெம்பர் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# முஸம்மில் தலைமையில் கொழும்பு மாநகர சபையில் தீபாவளி நிகழ்வு

## எதிர்க்கட்சிகள் கலந்துகொள்ளவில்லை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நேற்று கொழும்பு மாநகர சபையில் மாநகரசபை மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.யோகராஜன், டி.எம். சுவாமிநாதன், கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன உட்பட பலர் கலந்துகொண்டர்.

எனினும், கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி,ஜே.வி.பி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் தீர்க்கமான அரசியல் தீர்வொன்றை எட்டமுடியும்

## இலங்கை இந்துப் பேரவை வலியுறுத்து

தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையுடன் இருந்தால் மட்டுமே நாட்டில் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என அகில இலங்கை இந்து பேரவை வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக நாட்டின் சகல தமிழ் பேசும் தலைவர்களும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என்றும் அந்தப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அரசியல் தீர்வுத் திட்டம் இனியும் காலம் தாழ்த்தப்படக் கூடாது என அகில இலங்கை இந்து காங்கிரஸின் தலைவர் காசிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு நியாயமானத் தீர்வுத் திட்டமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களுக்கு இடையிலான சுயநலவாத கொள்கைகளை புறந்தள்ளி செயற்பட வேண்டியது அவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரயில் தொடர்பாடல் திட்டம் திங்கள் முதல் நடைமுறையில்

'ரயில் ரெக்கிங் சிஸ்டம்' என்ற பெயரில் புதிய ரயில் தொடர்பாடல் திட்ட மொன்று எதிர்வரும் திங்கட்கிழமை முதல் செயற்படுத்தப்பட உள்ளது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் 10 கடுகதி ரயில்களில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று ரயில்வேத் திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

அதன் பின்னர் அனைத்து ரயில்களிலும் இந்த விசேட தொடர்பாடல் கட்டமைப்பு செயற்படும் என்றும் அவர் கூறினார். அளவ்வ ரயில் விபத்தின் பின்னர் இந்த புதிய தொடர்பாடல் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டமைப்பின் மூலம் 10 கிலோ மீற்றர்கள் தொலைவில் ரயில் போக்குவரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இடையூறுகள் தொடர்பில் கண்டறிய முடியும். தனியார் தொலைத்தொடர்பு நிறுவனமொன்றின் பூரண ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இதனை போக்குவரத்து அமைச்சும், ரயில்வே திணைக்களமும் ஒன்றிணைந்து செயற்படுத்தவுள்ளன - என்றார்.

# 'கடாபியை நானே கொன்றேன்' புரட்சிப்படை போராளி தெரிவிப்பு

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கேணல் முவம்மர் கடாபியை தானே சுட்டுக்கொன்றதாக லிபிய புரட்சிப் படையைச் சேர்ந்த போராளியொருவர் கூறும் வீடியோவொன்று வெளியாகியுள்ளது.

கடாபி உயிருடன் இருப்பதை தன்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை என்பதால்தான் அவரைக் கொன்றதாக மேற்படி இளைஞர் கூறியுள்ளார். எனினும், குறித்த இளைஞனின் பெயர் விவரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

நேட்டோ ஆதரவுகொண்ட புரட்சிப் படையினரால் கைது செய்யப்பட்ட கேணல் கடாபி கொல்லப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என லிபிய இடைக்கால அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த வீடியோ வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

''நாம் அவரைப் பிடித்தோம் . நான் அவரின் முகத்தில் தாக்கினேன். போராளிகள் சிலர் அவரை அப்பால் கொண்டு செல்ல முயன்றனர். அப்போதுதான் நான் அவரை சுட்டேன். இரு தடவைகள் தலையிலும் நெஞ்சிலும் சுட்டேன்'' என அந்த இளைஞர் வீடியோவில் கூறியுள்ளார்.

# ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்

தேசிய புலனாய்வுப் பிரிவினர் என்றும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்றும் கூறிக் கொள்ளும் சிலரால் தான் அச்சுறுத்தப்படுவதாக ஊடகவியலாளரான சாந்த விஜயசூரிய பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

'லங்கா ஈ நியூஸ்' இணையத் தளத்தில் ஊடகவியலாளராகக் கடமையாற்றிய நிலையில் கடந்த மே மாதம் 13ஆம் திகதியுடன் அந்த நிறுவனத்தை விட்டு விலகி கடந்த செப்டெம்பர் மாதம் முதல் 'மவ்பிம' என்ற சிங்களப் பத்திரிகையில் சேவைக்கு இணைந்து கொண்டுள்ளேன் என்றும் இந்த நிலையில், லங்கா ஈ நியூஸில் தற்போது வெளிவரும் செய்திகள் தொடர்பில் தன்னையே சிலர் கேள்விக்கு உட்படுத்துகின்றனர் எனவும் ஊடகவியலாளர் சாந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தான் வதியும் பிரதேசத்தின் கிராம சேவையாளர் மற்றும் தனது தாய் ஆகியோரிடம் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொண்ட ஒரு நபர் தன்னைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்துகொண்டுள்ளார் எனவும் அந்த முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் ஊடகவியலாளர் சாந்த விஜயசூரிய தனது முறைப்பாட்டில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**சட்டமாணிக் கற்கை**

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக
LL.B (UK)
நாளை நீங்களும் சட்டத்தரணியாகலாம்.
இலங்கை மற்றும் சர்வதேச அங்கீகாரம் கொழும்பு Prince Academy வளவாளர்கள் கலந்துகொள்ளும் அறிமுகக் கருத்தரங்கு

29.10.2011 சனிக்கிழமை மு.ப.10 மணி
நுழைவுக் கட்டணம் - 500/-
இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புகள் பிரிவு)
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு : 0777-246723

**கனடா செல்ல விரும்புகிறீர்களா?**

மார்ச் மாதம் செல்லக்கூடிய வாய்ப்புண்டு. அத்தோடு...
மிகுதியை நேரில் பின்வரும் முகவரியில் சனி அல்லது ஞாயிறு பேசிக் கொள்வோமா?

**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.நகரில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலதுபுறமாக வரும் ஒழுங்கை)
T.P.: 021 4914527, 021 221 9016

**அஞ்சல் சேவை உத்தியோகத்தர், SLAS போட்டிப் பரீட்சைகளுக்குரிய வழிகாட்டி வகுப்புகள்**

*விரிவுரை:*
மூத்த (SLAS) இலங்கை நிர்வாக சேவை அதிகாரி.
சனி, ஞாயிறு மு.ப. 11 மணி

**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.நகரில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலதுபுறமாக வரும் ஒழுங்கை)
021 4914527, 021 221 9016

## மரண அறிவித்தல்

### குமாரசாமி அரசறட்ணம்



மயிலிட்டி, பெரியநாட்டுத் தேவன் துறையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், லோட்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி அரசறட்ணம் 24.10.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் குமாரசாமி - காலஞ்சென்ற சிரோன்மணி தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.10.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஜெயா பேக்கரி,*
*லோட்டன் வீதி,*
*மானிப்பாய்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org